DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H. Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 ஆவது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் சிந்திக்கும் கதிர் வீசும்
$1.00
416-752-1524
416-752-6703

உதயம் 1302 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday March 19, 2021

# “God bless America. They’re coming to our rescue”

## Ontario Premier Doug Ford responded to U.S. reports on COVID-19 vaccine distribution.

# “கடவுள் அமெரிக்காவை ஆசீர்வதிக்கட்டும். அவர்கள் எம்மை மீட்பதற்கு வருகின்றார்கள்”

## கனடாவிற்கு தடுப்பூசிகள் வழங்க சம்மதித்தது தொடர்பாக ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் மகிழ்ச்சி தெரிவிப்பு




(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

“கடவுள் எமது அயல்நாடான அமெரிக்காவை ஆசீர்வதிக்கட்டும். அவர்கள் எம்மை மீட்பதற்கு வருகின்றார்கள்” இவ்வாறு மகிழ்ச்சி பொங்க தெரிவித்தார் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள்.

நேற்று முன்தினம் காலை குயின்பார்க் எனப்படும் ஒன்றாரியோ பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது அவர் இவ்வாறு பாராட்டுத் தெரிவித்தார். நேற்று முன்தினம் வெள்ளிமாளிகையின் ஊடகப் பொறுப்பாளர் தனது வழமையான ஊடகச் சந்திப்பின் போது தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகவே கனடாவிற்கு தடுப்பூசிகள் வழங்க சம்மதித்தது தொடர்பாக டக் போர்ட் இவ்வாறு தெரிவித்தார்.

*(உள்ளே 5 பக்கத்தில் விபரமான செய்தி)*



# தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு மனித நேயத்துடன் உதவி வரும் கனடா மொன்றியால் புரூட்ஸ் ஹபி நிறுவன உரிமையாளர் ஸ்ரீ சண்முகலிங்கம்

## இதுவரையிலும் பல இலட்சம் ரூபாய்களை பல்வேறு உதவித் திட்டங்களுக்கு வழங்கியவர் அவரே என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் புகழாரம்




எமது தாயகத்தில் போரின் பாதிப்புக்களினாலும் மற்றும் வெள்ள அனர்த்தம், உணவுப் பஞ்சம் போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களுக்கு மனித நேயத்துடன் தனி மனிதராக உதவி வருபவர் கனடா மொன்றியால் **(FRUITS HABY)** புரூட்ஸ் ஹபி நிறுவத்தின் உரிமையாளர் ஸ்ரீ அண்ணர் சண்முகலிங்கம். கடந்த பல வருடங்களாக தொடர்ச்சியாக எமது மண்ணில் பல்வேறு பகுதிகளிலும் உதவிகள் தேவைப்படுவோருக்கு இதுவரையிலும் பல இலட்சம் ரூபாய்களை பல்வேறு உதவித் திட்டங்களுக்கு வழங்கியவர் அவரே. இவ்வாறு புகழாரம் சூட்டினார் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன்.

*(உள்ளே 15ம் பக்கத்தில் விபரமான செய்தி)*



INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404


THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
Where life begins...
வீடு வாங்க
விற்க அல்லது
அது தொடர்பான
விடயங்களை அறியவும்,
இலவச ஆலோசனைகளை
பெற்றுக்கொள்ளவும்
முன்னணி நிறுவனமான
The Guardian
Home Realty
நிறுவனத்தை
நாடுங்கள்
REAL ESTATE முகவராக விரும்பும் அன்பர்களே
Join our team!
Discover how our results producing motivation, coaching, marketing, and technical support will maximize your income as a
sales professional.
Email us at info@theguardianhomes.com
for more details.
80 Nashdene Rd, unit# F119 Scarborough, ON M1V 5E4
416 090 6565 | www.theguardianhomes.com

# உதயன் கதிரோட்டம்

## சகாயம் போன்ற நேர்மைக் குணம் கொண்டவர்கள் இலங்கைத் தமிழர் அரசியலில் அமைதியாய் இறங்க வேண்டும்

சகாயம் போன்ற நேர்மைக் குணம் கொண்ட அரச அதிகாரிகள் இலங்கைத் தமிழர் அரசியலிலும் அமைதியாய் இறங்க வேண்டும் என்பதே இந்த வாரக் கதிரோட்டத்தின் தலைப்பாகும். ஒரு தலைப்பிலேயே தமிழ்நாட்டு அரசியலையையும் இலங்கைத் தமிழர் அரசியலையும் முடிச்சொன்றினால் பிணைத்து விட்டோம். அந்த 'முடிச்சு" தான் சகாயம் என்னும் கறைபடியாத கைகளுக்கு உரிய யோக்கியர்.

இந்திய நிர்வாக சேவையில் இணைந்து உயர் பதவிகள் பலவற்றில் அமர்ந்து, நேர்மையின் சின்னமாகவும் ஊழல்வாதிகளுக்கு சிம்ம சொப்பனமாகவும் இருந்து பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள சகாயம் அவர்களின் தமிழ்நாட்டில் ஆயிரத்தில் ஒருவரல்ல. பத்திற்குள் ஒரு முத்து என்பதே, நாம் அவர் பற்றி கற்று அறிந்தவை.

ஈழத் தமிழ் மக்களின் தாய் தமிழகமாக விளங்கிய தமிழ்நாட்டில் களங்கமில்லாத அரசியல் வாழ்க்கையை மேற்கொண்ட கக்கன், காமராஜர் போன்றவர்களின் வரிசையில் சகாயம் என்னும் சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு புதிய அரசியல்வாதி எதிர்காலத்தில் பட்டியலிடப்படுவார் என்ற நம்பிக்கையோடு இந்த வார கதிரோட்டத்தை வடிக்க ஆரம்பிக்கின்றோம்.

கக்கன் மற்றும் காமராஜர் இருவருமே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். மிகவும் எளிமையான குடும்ப வாழ்வை மேற்கொண்டது போல, பொதுவாழக்கையிலும் எளிமையாகவே வாழ்ந்தார்கள்.

இவர்கள் இருவரைப் பற்றிய சிறு சிறு சம்பவங்கள் பற்றிய எழுத்துக்களை எம்மில் பலர் படித்திருப்போம். கக்கன் அவர்கள் அமைச்சராக இருந்து போதும் ஆர்ப்பாட்டமாக வாழவில்லை. அந்த பதவிகள் பறிக்கப்பட்ட போதும் கலங்காத மனத்துடன் தன் கடமைகளைத் தொடர்ந்த ஒரு கனவான் என அறிந்துள்ளோம்.

'மை வீரர்' காமராஜர் பற்றிச் சொல்லவே தேவையில். தன்னைத் தேடி வந்த பாரதப் பிரதமர் என்ற உயர் பதவியைத் கூட அடுத்துவருக்கு கரங்களிலே ஒப்படைத்தவர். தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது தன் வீட்டுக்கு வழங்கப்பெற்ற சலுகைகளைக் கூட புறக்கணித்து மகிழ்ந்த மகத்தான மனிதர்.'

தற்போது இந்திய நிர்வாக சேவையில் நல்லவர்களால் உச்சத்தில் வைத்து போற்றப்பெற்றவரே சகாயம்-ஐஏஎஸ். அவர் தற்போது தமிழ் நாட்டு அரசியலில் கால்களைப் பதித்துள்ளார். அவரைப் போன்றே அவரது அரசியல் சகாக்களும், நேர்மைக்குணம் கொண்ட கற்றவர்கள் சூழந்து வர வாக்குக் கேட்கும் வரிசையில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார். இந்த சகாயம் அணியினருக்கு நாம் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்போம். அவர்களுக்கு வெற்றிகள் நெருங்கினாலும் ஆபத்துக்கள் எவையும் நெருங்கக் கூடாது என்பதில் கவனத்துடன் இருக்க அவரைச் சுற்றியிருப்பவர்களின் கண்கள் துயிலாது இருக்க வேண்டும். உலகெங்கும் உள்ள தமிழ் உறவுகளோடு இணைந்து அவர் தம் அணியை வாழ்த்துவோம்.

இறுதியாக, சகாயம் ஐஏஎஸ் போன்ற நேர்மைக் குணம் கொண்ட அற்புத மனிதர்கள் இலங்கையிலும் தமிழர் அரசியல் களத்தில் அமைதியாய் இறங்க வேண்டும். எதிர்காலத்தில் அவர்களை நாம் சென்று தேடாமல், அவர்களே தம்மை அடக்கமாய் அடையாளம் காட்ட வேண்டும் என அழைப்பும் விடுப்போம்.

## ஸ்காபுறோ கென்னடி – எக்ளிங்டன் சந்திப்பில் சங்கர் அன் கோ நிறுவனத்தில் கோடை காலத் தேவைகளான பழக்கன்றுகள், பூக்கன்றுகள் மற்றும் தோட்ட உபகரணங்கள்



ஸ்காபுறோ நகரில் கென்னடி-எக்ளிங்கடன் சந்திப்பில் கடந்த 30 வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும் சங்கர் அன் கோ நிறுவனத்தில் எமது (Summer) கோடை காலத் தேவைகளான பழக்கன்றுகள், பூக்கன்றுகள் மற்றும் தோட்ட உபகரணங்கள் ஆகியவன இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் ஊர் மண்வெட்டிகள் மற்றும் ஊர் பிக்காசுக்கள் மற்றும் அனைத்து வகையான மரக்கறி விதைகள், வாழைக் கன்றுகள் தென்னங் கன்றுகள், வேப்பங் கன்றுகள், மல்லிகைச் செடிகள் ஆகியவற்றை பெற்றுக்கொள்ளலாம். அனைத்தையும் கையிருப்புக்கள் முடியும் முன்னரேயே நிறுவனத்திற்கு நேரடியாகச் சென்று பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:-
416 759 5100 அல்லது
416 759 4916


பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh. |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah, |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


## அறிவித்தல்

Scarborough இல் 3333 Finch Avenue East என்ற முகவரியில் அமைந்துள்ள Senior Persons Living Connected (SPLC) நிறுவனம் தமிழ் பேசும் வயது முதிர்ந்த மற்றும் மூத்தோர்களுக்கான பலதரப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றது.

நீங்கள் சமூக இடைவெளியைக் கருத்திற்கொண்டு தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்ற இக்காலகட்டங்களில் உங்களுடைய மனநலம் மற்றும் உடல் நலம் சார்ந்த தேவைகளைக் பூர்த்தி செய்யும் வகையில் பொருத்தமான சேவைகளை வழங்கிவருகின்றனர். இணையவழி மூலம் வாராந்த மற்றும் மாதாந்த மெய்நிகர் நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. மேலதிக தகவல்களை இணையத்தளத்திலோ (splc.ca) தொலைபேசி மூலமோ (416 493 3333) பெற்றுக்கொள்ளலாம்.


**House for Rent**

**Brimley / Eglinton**

**Bungalow house with 3 bedroom and 11/2 washroom.** மேல்தளம் மாத்திரம்.
**2 minutes from bus stop, shopping and school.** அனைத்து வசதிகளுடன்.
**Car parking included. No pets.**
**Available May 1st.**
தொடர்புகளுக்கு: **(647) 981-1997**

**பெண்களுக்கு வேலைவாய்ப்பு**

ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் உடனடியாக வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

தயவு செய்து பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு: ஜெயா
647 669 2739
**(647) 669-2739**

**இந்தியன் விசா**
•AIR TICKETS
•OCI - NEW APPLICATION/RENEWAL
•ENTRY VISA
•BUSINESS VISA 3 MONTHS/6 MONTHS/ 1 YEAR (Single / Double / Multy)
இலங்கை நாட்டுக்குள் உள் நுழைய, வெளிச்செல்ல தேவையான அரசாங்க ஆலோசனை வழங்கப்படும்.
**YARA GLOBAL (PVT) LTD**
No. 35, 1/4, Sagara Road, Colombo 4, Sri Lanka.
தொடர்பு: +94 7777 728707
E-mai: info@yaraglobal.lk

**அறை வாடகைக்கு உண்டு**

**Room for Rent - Kennedy / 401**

கெனடி வீதியல் அமைந்திருக்கும் 1950ல் **2 bedroom apartment** வாடகைக்குண்டு.
**Close to Highland Farms, Hwy 401, school, and bus stop.** அனைத்து வசதிகளுடன் உண்டு.
தொடர்புகளுக்கு:
**647-299-4238**
**905-472-4322**

**LOYAL PEST CONTROL**
Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.
Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
RANJAN: (416) 464-2415

**BASEMENT for RENT**

2 bedroom basement with separate entrance மற்றும் எல்லா வித வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.

குடும்பம் விரும்பதக்கது.

**Call:**
**(416) 821-2181**

**COMPUTER REPAIR**

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN:**
**(416) 894-6244**

# தலைமன்னாரில் புகையிரதம் – பேரூந்து விபத்து – பொலிஸாரே இதற்கு பதில் கூற வேண்டும்



தலைமன்னார் பொலிஸ் நிலையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள குறித்த புகையிரத கடவையில் ஏற்பட்ட விபத்திற்கு தலைமன்னார் பொலிஸாரே பொறுப்பு கூற வேண்டும் என பாதீக்கப்பட்ட தலைமன்னார் பியர் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் இருந்து தலைமன்னார் நோக்கி கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் பயணித்த தனியார் பேரூந்து செவ்வாய்க்கிழமை மதியம் 2 மணியளவில் தலை மன்னார் பகுதியில் புகையிரதத்துடன் மோதி விபத்திற்கு உள்ளாகிய 14 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு சுமார் 23 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

புகையிரதத்துடன் மோதி விபத்திற்கு உள்ளாகிய சந்தர்ப்பத்தில் புகையிரத கடவையில் பாதுகாப்பு ஊழியர் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை எனவும், புகையிரத கடவைக்கான தடை குறித்த நேரத்தில் இடப்படவில்லை எனவும் தெரிய வந்துள்ளது.

குறித்த புகையிரத கடவை தலைமன்னார் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில் தலைமன்னார் பொலிஸாரே வயோதிபர்கள் சிலரை நியமித்து புகையிரத கடவையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தி வந்ததோடு, அவர்களுக்கான கொடுப்பணவை தலைமன்னார் பொலிஸ் நிலையமே வழங்கி வைந்துள்ளது.

-எவே தலைமன்னார் பொலஸாரின் அசமந்த போக்கின் காரணமாகவே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதோடு, குறித்த புகையிரத கடவையில் உரிய முறையில் கடமையை மேற்கொள்ளுகின்றார்களா? என பொலிஸார் உரிய முறையில் கண்காணிக்காத நிலையிலே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்திற்கு தலைமன்னார் பொலிஸாரே உரிய பதில் கூற வேண்டும்.என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

# வணிக மயமாகிப் போன தமிழக அரசியலை சேவை மயமாக மாற்றவே நான் அரசியலுக்கு வந்துள்ளேன் என்கிறார் சகாயம் ஐ. ஏ.எஸ்

வணிக மயமாகிப் போன தமிழக அரசியலை சேவை மயமாக மாற்றி தமிழ்நாட்டு சட்டசபையை ஒரு சேவை மன்றமாகவும் அதன் அடையாளமாகவும் மாற்றுவதற்காகவே நான் அரசியலுக்கு வந்துள்ளேன் என்கிறார் சகாயம் ஐ. ஏ.எஸ்.

சில நாட்களுக்கு முன்னர் தனது தலைமையில் இயங்கும் அரசியல் அமைப்பான "அரசியல் பேரவை" அமைப்பின் ஊடகச் சந்திப்பின் போதே அவர் இதனை அறிவித்தார்.

தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் ஏனைய பல மாநிலங்களிலும், மாவட்ட கலக்டர் போன்ற பல உயர் பதவிகளை வகித்து நேர்மையின் அடையாளமாக ஆறியப்பட்டு வரும் ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி சகாயம், அரசியலில் ஈடுபடப்போவதாக சமீபத்தில் அறிவித்தார். அதன்படி, "அரசியல் பேரவை" என்ற பெயரில் வரும் சட்டசபை தேர்தலில் 20 தொகுதிகளில் போட்டியிடுவதாகவும் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து சென்னை கோயம்பேட்டில் செய்தியாளர்களிடம் சகாயம் பேசியதாவது, "அரசியல் மாற்றத்துக்கு பதில் சமூக மாற்றத்தை இளைஞர்கள் ஏற்படுத்த வேண்டும். இன்றைய காலம் தமிழக வரலாற்றின் மிக முக்கியமான காலம்.




புதிதாக ஒரு அரசியல் கட்சியை பதிவு செய்ய முடியாத சூழல் நிலவுகிறது. தமிழக சட்டசபை தேர்தலில் எனது "அரசியல் பேரவை" 20 தொகுதிகளில் போட்டியிடுகிறது. தமிழ்நாடு இளைஞர் கட்சி, வளமான தமிழகம் கட்சியுடன் எங்களது அரசியல் பேரவை இணைந்து போட்டியிடும்.

வரும் தேர்தலில் நான் போட்டியிடவில்லை. அந்த இரண்டு கட்சிகளின் சின்னத்தில் எங்கள் இளைஞர்கள் களம் காண்பார்கள்" என்றுள்ளார். "அரசியல் பேரவை" சார்பில் கொளத்தூரில் திமுகதலைவர் ஸ்டாலினை எதிர்த்து மாணிக்கம் என்பவர் போட்டியிடுகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



கனடா செய்திகள்

## United States agreed to help Canada for its vaccine needs. But do not know, when?

# தன்னிடம் தடுப்பூசிகள் கேட்ட கனடாவிற்கு உதவுவதாக அறிவித்த அமெரிக்கா





கனடியர்களுக்கு மிகவும் அவசியமும் அவசரமுமான கோவிட்-19 தடுப்பூசிகளை உடனடியாகத் தந்துதவும் படி வேண்டுகோள் விடுத்த கனடிய பிரதமருக்கு அமெரிக்காவின் வெள்ளை மாளிகை சம்மதம் தெரிவித்துள்ளது. ஆனால் எப்போது மேற்படி தடுப்பூசிகள் வந்து சேரும் என்ற கால அவகாசமோ அன்றி உறுதிமொழியோ இதுவரை அளிக்கப்படவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி விடயம் தொடர்பாக அமெரிக்காவில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த வெள்ளைமாளிகையின் செய்தித் தொடர்பாளர் பிசாக்கி அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்.

"எமக்கு கனடாவிடமிருந்தும் மெக்சிக்கோவிடமிருந்தும் வேண்டுகோள்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கு அதிபர் அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளார். ஆனால் எப்போது இந்த தடுப்பூசிகள் கனடாவிற்கு அனுப்பப்படும் என்பது பற்றிய விபரங்கள் எனது அலுவலகத்திற்கு வந்து சேரவில்லை. ஆனால் அதற்கான பணிகளில் வெள்ளை மாளிகையின் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்" என்றார்.

மேற்படி விடயம் தொடர்பாக எமது செய்தியாளர் அனுப்பியுள்ள குறிப்பில், அமெரிக்க அதிபரின் பட்டியலில் கனடாவிற்கும் மெக்சிக்கோவிற்கும் உடனடியாக தடுப்பூசிகளை அனுப்பும் விடயம் முதலாவது தெரிவாக இருக்கின்றன என்றும் ஆனால் அவை சில நாட்களில் அல்லது சில வாரங்களில் என்று உறுதியாகத் தெரிவிக்கப்பட வில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எனினும், அமெரிக்கர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பெற்ற பின்னர் நிச்சயமாக இந்த இருநாடுகளின் வேண்டுகோள்கள் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளை நிச்சயமாக அமெரிக்க அதிபரும் வெள்ளை மாளிகையின் தடுப்பூசிகளுக்கான செயலகமும் எடுக்கவுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாக அமெரிக்கர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பெற்ற பின்னர் கனடாவின் வேண்டுகோள் தொடர்பாக கவனம் எடுக்கப்படும் என்ற அறிவிப்பு கனடியப் பிரதமரையும் மற்றும் கனடிய அரசாங்கத்தின் சார்பில் தடுப்பு மருந்துக் கொள்வனவில் முக்கிய தலைமைத்துவம் வகிக்கின்ற, அமைச்சர் அனிற்றா ஆனந்த் அவர்களும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதாக ரொரன்ரோ பெரும்பாகத்தில் உள்ள ஆளும் லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி பாராளுமன்ற உறுப்பினர் எமது செய்தியாளருக்கு மேலும் தெரிவிக்கையில், "ஆரம்பத்திலிருந்தே எமது பிரதமரும் அமைச்சர் ஆனந்த் அவர்களும் இந்த விடயத்தில் மிகவும் திறந்த மனதுடனே தங்கள் கடமைகளைச் செய்தனர். ஆனால் பல விநியோகங்களில் நீண்ட தாமதங்கள் ஏற்பட்டன. ஆனாலும் அவர்கள் சோர்வடையாமல் தொடர்ச்சியாக அவர்களது அதிகாரிகளைக் கொண்ட பணிகளை மேற்கொண்டார்கள். எனினும் தாமதங்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாமல் போய்விட்டது. இதற்கிடையில் வெளிநாடுகளிலிருந்து, குறிப்பாக இந்தியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் ஜேர்மனியிலிருந்தும் நாம் எதிர்பார்க்கும் கோவிட்-19 தடுப்பூசிகள் யூன் மாதத்திற்கு முன்னர் வந்து சேர்ந்து விடும் என்ற நம்பிக்கை எமது அரசாங்கத்திற்கு உண்டு" என்றார்.

## "God bless America, they're coming to our rescue,"

### Ontario Premier Doug Ford responded to the U.S. reports on COVID-19 vaccine doses to Canada.

# "கடவுள் அமெரிக்காவை ஆசீர்வதிக்கட்டும். அவர்கள் எம்மை மீட்பதற்கு வருகின்றார்கள்"

## கனடாவிற்கு தடுப்பூசிகள் வழங்க சம்மதித்தது தொடர்பாக ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் மகிழ்ச்சி தெரிவிப்பு



(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

"கடவுள் எமது அயல்நாடான அமெரிக்காவை ஆசீர்வதிக்கட்டும். அவர்கள் எம்மை மீட்பதற்கு வருகின்றார்கள்" இவ்வாறு மகிழ்ச்சி பொங்க தெரிவித்தார் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள்.

நேற்று காலை குயின்பார்க் எனப்படும் ஒன்றாரியோ பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது அவர் இவ்வாறு பாராட்டுத் தெரிவித்தார். நேற்று முன்தினம் வெள்ளிமாளிகையின் ஊடகப் பொறுப்பாளர் தனது வழமையான ஊடகச் சந்திப்பின் போது தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகவே கனடாவிற்கு தடுப்பூசிகள் வழங்க சம்மதித்தது தொடர்பாக ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அவர்கள் மிகுந்த பரவசத்துடன் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக ஒன்றாரியோ முதல்வர் மேலும் தெரிவிக்கையில் "நான் டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியிலும் கோவிட்-19 தடுப்பூசிகளை கனடிய மக்களுக்கும் ஒன்றாரியோவின் மக்களுக்கும் உடனடியாக வழங்கும் படி நேரடியாகக் கேட்டிருந்தேன். அவர் தருவதற்கு சம்மதிக்கவில்லை. பின்னர் புதிய ஜனாதிபதி ஜோ பைடன் அவர்களிடமும் வேண்கோள்விடுத்தேன். உண்மையாகவே அவர்கள் இவ்வாறு நான் வேண்டியதை விரும்பியிருக்க மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்.

தற்போது அமெரிக்கா எங்கள் நாட்டுக்கு 2 மில்லியன் கோவிட்-19 தடுப்பூசிகள் வழங்குவதற்கு சம்மதித்துள்ளதை வெள்ளை மாளிகை அறிக்கைகளில் வாசித்தேன். இதனால் ஒன்றாரியோவின் முதல்வர் என்ற வகையில் நான் பரவசப்படுகின்றேன்". இவ்வாறு டக் போர்ட் அவர்கள் தெரிவித்தார்கள்.

## The health and safety of Ontario's students is our top priority.

### - Official Opposition Leader Andrea Horwath

# ஒன்றாரியோ மாணவர்களின் சுகவாழ்வும் பாதுகாப்புமே எமக்கு முக்கியம் என்கிறார் மாகாணத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அன்றியா ஹோவார்த்



"நாம் மாகாண பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சியாக விளங்கினாலும் இங்கு வாழும் மக்கள் அனைவரதும் சுகவாழ்வும் அவர்களத பாதுகாப்பு ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்ற ஆளும் கட்சியினரைக் கேட்டு வருகின்றோம் . அது போல, ஒன்றாரியோவில் பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று கற்கும் மாணவர்களின் உடல்நலமும் பாதுகாப்புமே எமது முக்கிய கவனமாக உள்ளது. ஆளும் கட்சியினர் சொல்வது போன்று பாடசாலைகளை மூடி வையுங்கள் என்று ஒருபோதும் வற்புறுத்தவில்லை"

இவ்வாறு கூறினார் ஒன்றாரியோ மாகாணத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவரான அன்றியா ஹோவார்த் அவர்கள்.

நேற்று மாலை கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரோடு அவர் நடத்திய தொலைபேசி மூலமான நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டதற்கு ஏற்ப இந்த நேர்காணல் ஆரம்பமானது. சுமார் பதினைந்து நிமிடங்கள் இடம்பெற்ற இந்த நேர்காணலில் பல விடயங்களை திறந்த மனதோடு எடுத்துச் சொன்னார் அன்றியா ஹோவார்த் அவர்கள்.

"ஒன்றாரியோவின் கல்வி அமைச்சு பாடசாலைகளை இந்த நோய்த் தொற்று காலத்தில் திறந்து வைத்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வது ஏற்புடையது அல்ல என்று பிரதான எதிர்க்கட்சித் தலைவரான நீங்கள் மாகாணப் பாராளுமன்றத்திலும் பொது இடங்களிலும் கூறி வருவதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளாரே? அவ்வாறு உங்கள் கருத்து இருக்குமானால் அதற்குரிய காரணங்களை விளக்குவீர்களா? " என பிரதம ஆசிரியர் முன்வைத்த கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

"நானோ அல்லது எமது கட்சியின் உறுப்பினர்களோ பாடசாலைகளை மூடிவையுங்கள் என்று ஒருபோதும் கூறவில்லை. பாடசாலைகளுக்குச் சென்று நேரடியாக கற்றல் நடவடிக்கைகளில பங்கெடுத்துள்ள மாணவர்களின் சுகவாழ்வு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக மேலும் அதிகமாக கவனமெடுங்கள் என்று தான் வலியுறுத்தி வருகின்றோம்.

பாடசாலை மாணவர்களுக்குரிய சகல வசதிகளும் அங்கு செய்து கொடுக்கப்பட வில்லை நல்ல காற்றைச் சுவாசிக்கக் கூடிய வாய்ப்புக்கள் அங்கு இல்லை. அவற்றைக் கவனித்து சகல மாணவர்களின் உடல்நலத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துங்கள் என்றுதான் வலியுறுத்தி வருகின்றோம்" என்றார் அன்றியா

அடுத்த கேள்வியாக உதயன் பிரதம ஆசிரியர், "தற்போதைய முக்கிய விடயமாக உள்ள கோவிட்-19 தடுப்பூசி விநியோகம் பற்றிய தங்கள் கருத்துக்கள் என்ன?" என்று வினாவினார்.

"நல்லதோர் கேள்வி இது. நீங்கள் அறிந்திருப்பீர்களோ தெரியாது, மாகாணத்தின் சுகாதாரப் பிரிவினர் இந்த விடயத்தில் நேர்த்தியாக பணியாற்றவில்லை என்றே நான் கூறுவேன். காரணம் சில நகரங்களில் போதிய தடுப்பூசிகள் கையிருப்பில் இருந்தாலும், அவை அவசரமாகத் தேவையானவர்களுக்கு வழங்கப்படவில்லை. பல பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்படவில்லை. எனவே புதிதாகப் பணிகளுக்கு அமர்த்தப்பட்டவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை செய்ய முடியாமல் உள்ளது. குறிப்பாக தடுப்பூசி வழங்கப்பட வேண்டி தொலைபேசி மூலமாக அழைப்பவர்களின் தொலைபேசி அழைப்புக்களுக்கு பதிலளிக்கும் வகையில் நேர்த்தியான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இதனால் காலதாமதமும், வீண் விரயமும் ஏற்படுகின்றது.

எதிர்க்கட்சியின் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் இந்த குறைபாடுகளை கவனித்து வருகின்றோம்" என்றார் அன்றியா

மேலும் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் பல விடயங்களை பொறுப்புணர்வுடன் அன்றியா உதயன் பிரதம ஆசிரியரோடு பகிர்ந்து கொண்டார்

மற்றுமொரு கேள்வியாக, "மாகாண அரசு வழங்கும் நிதி உதவிகள் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்புகளுக்கு வழங்கும் நிதி உதவிகள் பற்றிய அறிவிப்புக்கள் தொடர்பாக தாங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்" என்ற பிரதம ஆசிரியரின் கேள்விக்கு பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் அன்றியா ஹோர்வாத் அவர்கள் எமது மாகாணத்தில் உள்ள இலாப நோக்கற்ற அமைப்புக்களுக்கு நிதி உதவிகள் வழங்குவதோ அன்றி, சிறு தொழில்களை நடத்துகின்றவர்களுக்கு நிதி வசதிகள் செய்து கொடுப்பதோ எமக்கு விருப்பம் இல்லா விடங்கள் அல்ல. அவை மிகவும் அவசியமானவை, ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி நிதி உதவிகள் தகுந்த காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பதை கண்காணிக்க வேண்டும். அதையே நாம் விரும்புகின்றோம். இந்த நோய்த் தொற்று காலத்தில் இவ்வாறான உதவிகள் மக்களின் மன அழுத்தங்களைக் குறைத்து அவர்கள் பொழுது போக்கு விடயங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் ஈடுபடுவது மிகவும் அவசியமாகின்றது" என்றார் அன்றியா ஹார்வாத் அவர்கள்.

# இலங்கையில் கடத்தல்கள் "மீண்டும் ஆரம்பம்" கலக்கத்தில் மக்கள். அச்சத்தில் எதிர்க்கட்சிகள்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



"வெள்ளை வான்" எனும் வார்த்தை ஒரு காலத்தில் இலங்கையில் அச்சத்தின் மறுபெயராகவே இருந்தது. போர்க் காலத்தில் தமிழர் தாயகப் பகுதிகள் மற்றும் தலைநகர் கொழும்பில் வகைதொகையின்றி ஆட்கள் கடத்தப்படுவதும் பின்னர் அவர்களுக்கு என்ன ஆனது என்று தெரியாத நிலையும் வரலாற்றில் கறைபடிந்த பக்கங்கள்.

இப்படி கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்களில் அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சாமானியர்கள், அரச உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள் எனப் பட்டியல் நீளும்.

போர் முடிந்து 11 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த மோசமான நடவடிக்கை தொடருவதாகக் கவலைகள் மீண்டும் எழுந்துள்ளன.

அவ்வகையில் இலங்கையின் தென்பகுதியில் ஒரு ஊடகவியலாளர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ள செய்தி மீண்டும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் "கடத்தல் கலாச்சாரம்" மீண்டும் தனது கோர முகத்தைக் காட்ட ஆரம்பித்துள்ளதாக எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. கடந்த வாரம் (10 மார்ச்) தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவர் கடத்தப்பட்டு தாக்குதலுக்கு ஆளாகியுள்ளார், என்று முன்னாள் சபாநாயகரும் அரசியல் யாப்பு பேரவையின் தலைவருமாக இருந்த கரு ஜயசூரிய கவலை வெளியிட்டுள்ளார்.

கறுப்பு நிற வாகனத்தில் இணையதள ஊடகவியலாளரான சுஜீவ கமகே என்பவர் கடத்தப்பட்டு, அவரது செய்தி மூலங்கள் மற்றும் அரசியல் தொடர்புகள் பற்றிய தகவல்களைத் தெரிவிக்கும்படி, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தனது ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் கரு ஜயசூரிய சபாநாயகராக இருந்த போது அவரது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும்-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து, ரணில்-மைத்ரி தலைமையிலான நல்லாட்சியிலும் ஆட்கள் கடத்தப்பட்டதைச் சுட்டிக்காட்டியுள்ள இணையப் பயன்பாட்டாளர்கள், அதற்கு கரு ஜயசூரியவின் பதிலென்ன? என்று வினவியுள்ளனர்.

இதனிடையே கடத்தல்களை "மீண்டும்" தொடங்க திட்டம் ஏதேனும் உள்ளதா என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

சுஜீவ கமகேவிடம், அவரது செய்தி மூலங்கள் மற்றும் அரசியல் தொடர்புகள் பற்றிய தகவல்களை தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவருக்காகக் குரல் எழுப்புவதில் ஊடகவியலாளர்கள் மத்தியில் ஐக்கியம் காணப்படாமை கவலையளிப்பதாக, முன்னாள் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடத்தல் மற்றும் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார். அப்படிச் செய்வதன் மூலமே அதிகாரிகள் மீது நம்பிக்கை ஏற்படும் என்றும், குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் எனும் செய்தி இனிவரும் காலங்களில் இப்படியான நிகழ்வுகள் நடைபெறாது என்பதை உறுதி செய்யும் எனவும் கரு ஜயசூரிய கூறுகிறார்.

சுஜீவ கமகே கடத்தப்பட்ட பின்னர், அவரை வேறொரு இடத்திற்கு அழைத்துச் சென்று, கொடூரமாக சித்திரவதை செய்து அடித்து, அவரது கை மற்றும் மார்பு பிரதேசங்கள் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சிகிச்சையின் பின்னர் அவர் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்.

தரவுகளைச் சேமித்து வைக்கும் இரண்டு பென் டிரைவ்கள் உட்பட அவரிடமிருந்து பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.



Thread

Harsha de Silva @HarshadeSilvaMP · Mar 15
What we hear is that "#SriLanka Siyarata web journalist Sujeewa Gamage was gagged, hooded, thrown into a black van and tortured for info on his sources and political contacts before being dumped on a street corner." Pres @GotabayaR are you going to let abductions start again?

Karu Jayasuriya @KaruOnline · Mar 14
Resembling the pre-2015 era, a journalist has been abducted, assaulted, and threatened on the 10th. Lack of solidarity in the media industry to stand up for their victimized fellow is worrisome. The culprits must be investigated and punished to restore trust in the authorities.
Show this thread

14 43 126

Harsha de Silva @HarshadeSilvaMP · Mar 15
@Economynext says police have denied any knowledge of this incident. Why on earth would @KaruOnline tweet something that has not happened and @siwura provides full details of same which I have mentioned in "quotes" as what we heard. Something is amiss.

4 5 25

# இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு தொடரும் நெருக்கடி: சட்ட உதவியை நாடியமைக்காக கைது செய்யப்பட்ட சம்பவம்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



இலங்கையில் ஆயுதக் குழுவொன்றால் கடத்தப்பட்ட செய்தியாளர் ஒருவர் அது குறித்து வாக்குமூலம் ஒன்றை அளிக்கச் சென்ற போது பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஊடகவியலாளர் சுஜீவ கமகே தனக்கு உதவி செய்ய சட்டத்தரணி ஒருவரை அமர்த்திக் கொண்டதன் மூலம் "சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாத" குற்றமொன்றைச் செய்துள்ளார் என்று கொழும்பு குற்றப்பிரிவு விசாரணைப் பிரிவு (சிசிடி) அதிகாரிகள் நேற்று (மார்ச்17) தெரிவித்தனர்.

தீக்காயங்கள் மற்றும் இதர காயங்களுக்காக சிகிச்சைப் பெற்று வந்த சுஜீவ கமகே மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் அவர் விசாரணைக்காக அழைக்கப்பட்ட நிலையில் தனது பாரியார் திருமதி நயனி கமகேஉடன் சிசிடி அலுவலகத்திற்குச் சென்றார்.

முன்னதாக இம்மாதம் 10ஆம் திகதியன்று அவர் கடத்தி சித்திரவதைச் செய்யப்பட்ட பின் சாலையோரமாக வீசப்பட்டார்.

விசாரணைக்கு சென்ற சுஜீவ மற்றும் நயனி இருவரும் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததால், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷவின் உதவியை நாடினர். இதையடுத்து அவரை பொலிசார் அச்சுறுத்தியதாக அறியப்படுகிறது. மேலும் "ஊடகவியலாளர் ஒருவர் சார்பாக சட்டத்தரணி ஒருவர் வந்துள்ளார்" எனவே சுஜீவ கமகே விடுவிக்கப்பட மாட்டார் என்று அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

"அவர் பல மணி நேரங்கள் அச்சுறுத்தலின் கீழ் விசாரிக்கப்பட்டார் என்று உறவினர்கள் எனக்குத் தெரிவித்தனர்" என்று சட்டத்தரணி ராஜபக்ஷ ஜே டி எஸ் இணையதளத்துக்கு தெரிவித்துள்ளார்.

"என்னால் அவருக்கு சட்ட உதவி செய்ய முடியாதது மட்டுமல்ல, அவர் சார்பாக சட்டத்தரணி ஒருவர் பொலிஸ் நிலையம் வந்ததும் ஒரு குற்றம், எனவே அவரை விடுவிக்க முடியாது என்று என்னையும் அச்சுறுத்தினர். சித்திரவதை செய்யப்பட்டு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு நபரின் சட்டத்தரணி நான் என்று சொல்லியும் என்னை வெளி வாயிலைத் தாண்டி உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அனுரங்க எனும் பொலிஸ் துணை அத்யட்சகர் சுஜீவ கமகே அரசை இக்கட்டான நிலைக்கு தள்ளியுள்ளதால் அவரை விடுவிக்க முடியாது என்று என்னிடம் கூறினார்".

இதேவேளை ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலான விசாரணைக்குப் பின்னர் நயனிகமகே நள்ளிரவைக்கடந்த நேரத்தில் விடுவிக்கப்பட்டார்.

தனது செய்திகளுக்கான மூலத்தை அறிந்துகொள்வதற்காகத் தான் சித்திரவதை செய்யப்பட்டதாக மருத்துவமனையில் செய்தியாளர்களிடம் கமகேதெரிவித்தார். மேலும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுடனான தொடர்புகுறித்துக்கேட்டு தன்னை கடத்தியவர்கள் சித்திரவதை செய்தனர் என்று கமகே கூறுகிறார்.

சட்டத்தரணியின் உதவியின்றி சுஜேவகமகேயிடம் பெறப்பட்டவாக்கு மூலம் குறித்து குடும்பத்தினர் கவலையடைந்துள்ளனர். மிகவும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு பெறப்பட்ட அந்த வாக்குமூலம் அவருக்கு எதிராக வழக்கு பதியப்பயன்படுத்தப்படும் என்றும் அவர்கள் அஞ்சுகின்றனர்.

ஊடகச் சுதந்திரப்பட்டியலில், உலகளவில் மிகவும் தாழ்வான நிலையிலுள்ளபோதிலும் இலங்கையில் தொடர்ந்து ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.




இலங்கையில் ஊடகசுதந்திரம் என்பது ஏட்டளவில்கூட இல்லை, அங்கு ஒரு செய்தியாளராகப் பணியாற்றுவது மிகவும் சவாலானவிஷயம் என்று பன்னாட்டு அமைப்புகள் தொடர்ந்து கூறிவந்துள்ளன.



# தவிசாளரின் கோரிக்கையை ஏற்று வாதரவத்தைக்கான போக்குவரத்தை ஆரம்பிக்க அமைச்சர் பணிப்புரை

வாதரவத்தை கிராமத்திற்கான பொதுப் போக்குவரத்து சேவையினை உடன் ஆரம்பிக்குமாறு வலிகாமம் கிழக்குத் தவிசாளர் தியாகராஜா நி-ரோஷ் விடுத்த கோரிக்கையை ஏற்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுணுகம அதிகாரிகளுகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இன்றைய தினம் (17) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுணுகமவும் கலந்து கொண்டார். அவரிடம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ், போருக்கு முன்னர் கிராமங்கள் பலவற்றகக்கு இடம்பெற்ற சேவைகளை இலங்கை போக்குவரத்துச் சபை நிறுத்தியுள்ளது.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். பாதிககப்பட்ட மக்களை நோக்கி அரசின் பொதுப்போக்குவரத்துச் சேவைகள் சீராக இடம்பெறவேண்டும். அச்செழு கிராமத்திற்கான போக்குவரத்து சேவைகளும் இடம்பெறுவதில்லை. எனவே நிறுத்தப்பட்டுள்ள சேவைகள் தொடர்பில் ஆராய்ந்து மீளவும் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். வாதரவத்தைக்கான சேவை முன்னுரிமை அடிப்படையில் அவசியமாகவுள்ளது எனக்கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து போக்குவரத்துச் சபை அதிகாரிகளின் கருத்துக்களைக் கேட்டறித்த அமைச்சர், வாதரவத்தைக்கான போக்குவரத்துச் சேவையி-னை தாமதமின்றி ஒழுங்குபடுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இதேவேளை வடக்கிற்கு வெளியேயான பயணங்களின்போது பேருந்துகள் உணவுக்காக தரிக்கும் இடங்கள் உணவுப்பண்டங்களை அதிகமான விலைக்கு விற்பனை செய்கின்றனர். கட்டுபாடற்ற விலைக்கு பொருட்களைவிற்பனை செய்யாத இடங்களில் பேருந்துகளை நிறுத்துவதைத் தவிர்க்குமாறும் வலிகா-மம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை விடுத்தார். இதற்கு அரச பேருந்துகள் நூறுகிலோ மீற்றருக்கு ஒரு அங்கீகாரம் பெற்ற உணவகத்திலேயே நிறுத்த பணிக்கப்பட்டுள்ளது. அவ் இடங்களில் போக்குவரத்து சபையின் உரி-மம் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் அங்கு விலைகள், சுகாதார நடைமுறைத்தவறுகள் இடம்பெறின் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஜெனீவா விடயத்தில் இலங்கைக்கு சவாலாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் செயற்படுவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றி செய்தி வெளியாகியுள்ளது

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்த வேண்டும் என்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முனைப்பு, ஜெனீவா விடயத்தில் இலங்கைக்கு பெரும் சவாலாக உள்ளதென கொழும்பைத் தளமாக கொண்டு இயங்கும் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு சவாலான வாரம் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள செய்திக்கட்டுரையிலேயே இதனைத் தெரிவித்துள்ள அவ்வூடகம், ஐ.நாவில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரின் உரைக்கு, பதிலுரையாக அமைந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரனின் அறிக்கையினை சுட்டிக்காட்டி, ஐ.நா மனித உரிமைச்சபை விடயத்தில் சிறிலங்காவுக்கு எதிரான தீவிரமான பிரச்சாரத்தினை மேற்கொள்பவராக பிரதமர் வி.உருத்திரகுமாரன் உள்ளரெனவும தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பில் வாக்கெடுப்பினை நோக்கி சமர்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில், சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தும் வகையில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டுமென கூட்டுநாடுகளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளதாகவும் அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரித்தானிய அரசாங்கத்தின் தடைக்கு எதிராகவும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சட்டநடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ள அச்செய்திக்கட்டுரையில், தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வித பயங்காரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வாதிடுகின்றது எனவும் தெரிவித்துள்ளது.




# தலைமன்னாரில் புகையிரத விபத்தில் உயிரிழந்த மாணவனின் இறுதி கிரிகையில் பலர் கலந்து கொண்டு அஞ்சலி

## பேரூந்தின் சாரதி மற்றும் குறித்த புகையிரத கடவையின் பாதுகாப்பு ஊழியர் ஆகியோரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு




தலைமன்னார் பியர் பகுதியில் செவ்வாய்க்கிழமை (17) மதியம் தனியார் பேரூந்தும் புகையிரதம் மேதி எற்பட்ட விபத்தில் உயிரிழந்த தலைமன்னார் பியர் பகுதியை சேர்ந்த பாலசந்திரன் தருண் (வயது-14) என்ற மாணவனின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட நிலையில் குறித்த மாணவனின் இல்லத்தில் புதன்கிழமை அஞ்சலி இடம் பெற்றது.

குறித்த மாணவனின் உடலுக்கு பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

சிறுவனின் உடல் பொது மக்களின் அஞ்சலியின் பின்னர் மாலை 3 மணி-யளவில் தலைமன்னார் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படது.

இதே வேளை விபத்திற்கு உள்ளான தனியார் பேரூந்தின் சாரதி மற்றும் குறித்த புகையிரத கடவையின் பாதுகாப்பு ஊழியர் ஆகியோர் செவ்வாய்க்கிழமை (17) மாலை தலைமன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போது குறித்த இருவரையும் எதிர் வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



















குறிப்பாக சிறுவனின் உடலுக்கு தலைமன்னார் பகுதி மக்கள், தலைமன்னார் பாடசாலை மாணவர்கள், அரசியல் பிரமுகர்கள், அரச ஊழியர்கள் என பலரும் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

- மன்னார் நிருபர் (17-03-2021)

# தலைமன்னாரில் புகையிரத கடவையில் விபத்தின் போது பாதுகாப்பு ஊழியர் கடமையில் இருக்கவில்லை



தலைமன்னாரில் தனியார் பேருந்து புகையிரதத்துடன் மோதி விபத்திற்கு உள்ளாகிய சந்தர்ப்பத்தில் புகையிரத கடவையில் பாதுகாப்பு ஊழியர் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை எனவும், புகையிரத கடவைக்கான தடை குறித்த நேரத்தில் இடப்படவில்லை எனவும் தெரிய வந்துள்ளது.

மன்னாரில் இருந்து தலைமன்னார் நோக்கி பயணித்த தனியார் பேருந்து இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 2 மணியளவில் தலை மன்னார் பகுதியில் புகையிரதத்துடன் மோதி விபத்திற்கு உள்ளாகிய 14 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம் பெற்ற போது குறித்த தனியார் பேருந்தில் 30 பேர் பயணித்துள்ளனர். விபத்தில் காயமடைந்த மாணவர்கள், பயணிகள் உற்பட 25 பேர் உடனடியாக அம்புலான்ஸ் வண்டி மூலம் மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.



இதன் போது மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். பலத்த காணமடைந்த ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கே.செந்தூர்பதிராஜா தெரிவித்தார்.







இதே வேளை குறித்த விபத்து இடம் பெற்ற சத்தர்ப்பத்தில் புகையிரத கடவையில் பாதுகாப்பு ஊழியர் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை எனவும், புகையிரத கடவைக்கான தடை குறித்த நேரத்தில் இடப்படவில்லை எனவும் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விபத்திற்குள்ளான பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் தலைமன்னார் பொலி

**- மன்னார் நிருபர்**
(16-03-2021)

# விடுதலைப்புலிகளின் நிதர்சனம் தொலைக்காட்சியின் ஆரம்ப கால பொறுப்பாளர் பரதன் இலண்டனில் காலமானார்



தமிழீழ விடுதலைப்புலிகள் இயகத்தின் உத்தியோகபூர்வமான தொலைக்காட்சிச் சேவையான நிதர்சனம் ஊடகத்தின் ஆரம்பகால பொறுப்பாளராக பணியாற்றி தலைவர் பிரபாகரன் அவர்களின் நன் மதிப்பைப் பெற்ற பரதன் (இராசநாயகம் பரதன்) இலண்டன் மாநகரில் மாரடைப்பால் காலமானார் என்ற சோகமான செய்தியை எமது வாசக அன்பர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் திருநேல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட பரதன் அவர்கள் இலங்கையின் மூத்த எழுத்தாளரும் யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரியின் பிரயோக கணிதம் உயர் கணிதம் ஆகிய பாடங்களின் ஆசிரியருமான சு. இராசநாயகம் அவர்களின் சிரேஸ்ட புதல்வனும் இலங்கையின் சிரேஸ்ட ஊடகவியலாளரும் தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் "ஈழநாடு பத்திரிகையின் பிரதம செய்தி ஆசிரியருமான பாரதி இராசநாயகத்தின் சகோதரரும் ஆவார்.

நிதர்சனம் தொலைக்காட்சியின் வளர்ச்சியில் பரதனுக்கு பெரும் பங்கு உண்டு. பின்னாளில் கவிஞர் புதுவை இரத்தினதுரை போன்ற கலைத்துறை ஜாம்பாவான்களோடும் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் "கலைப் பண்பாட்டு இயக்கத்தின் முக்கிய செயற்பாடுகளிலும் கரம் கோர்த்து செயற்பட்டவர் என்பதும்,யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக லண்டனில் வசித்து வந்தார். 60 வயதான பரதன் வழமையாகச் செல்வது போன்று லண்டனில் நடைபயிற்சிக்கு சென்ற போது மாரடைப்பால் காலமானார் என அவரின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அவரின் பிரிவால் துயரமடைந்திருக்கும் அவரின் குடும்பத்தினர் உறவினர்கள் அனைவருக்கும் கனடா உதயன் மற்றும் நண்பன் இணையத்தளம் ஆகியன ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றன.

# மன்னாரலிருந்து இன்று காலை கண்டி நோக்கி பயணித்த அரச பேரூந்தில் வயோதிபர் ஒருவர் திடீர் மரணம்





மன்னாரில் இருந்து கண்டி நோக்கி இன்று வெள்ளிக்கிழமை (19) காலை பயணிகளுடன் பயணித்த இலங்கை அரச போக்குவரத்து சேவை பேரூந்து ஒன்றில் பயணித்த வயோதிபர் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

-மன்னார் புதிய பேரூந்து தரிப்பிடத்தில் இருந்து இலங்கை அரச போக்குவரத்து சேவை பேரூந்து ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 5.30 மணியளவில் பயணிகளுடன் கண்டி நோக்கி பயணித்துள்ளது.

-இதன் போது குறித்த பேரூந்தில் குறித்த வயோதிபரும் பயணித்துள்ளார்.

இதன் போது மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள இராணுவ சோதனைச்சாவடியில் குறித்த பேரூந்து சோதனைக்காக நிறுத்தப்பட்டுள்ளது.

-இதன் போதே குறித்த வயோதிபர் பேரூந்தின் இருக்கையில் திடீர் சுகயீனம் காணரணமாக உயிரிழந்துள்ள நிலையில் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக இவரது சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. உயிரிழந்த வயோதிபர் இது வரை அடையாளம் காணப்படவில்லை.

மேலதிக விசாரனைகளை வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(மன்னார் நிருபர்) (19-03-2021)


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE


எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்பந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# கடன் பிரச்சனைகளைத் தீர்த்து எவ்வாறு உங்கள் வணிகத்தை வளர்க்க முடியும்?



**உ**ங்கள் வியாபாரத்தை வளர்த்துக் கொள்ள வேண்டியதற்கு நீங்கள் செய்யவேண்டிய என்னவென்றால்: நீங்கள் பின்பற்றக் கூடிய வியாபார உத்திகளைப் பாவித்து அதில் ஈடுபடுவதே ஆகும். அவ்வாறு செய்தால் தான் கடன் சுமைகளிலிருந்து நீங்கி உங்கள் வியாபாரத்தை நீங்கள் நடத்த முடியும்,

இது ஒருபுறம் இருக்க, நாங்கள் உங்கள் கடனை வளர்த்து, உங்கள் வியாபாரம் வளர்வதற்கு உங்களுக்கு கடன் அவசியம், ஆனால் கடன் என்பது வளர வளர உங்கள் வியாபாரத்தைப் பாதிக்கும். எனினும் லைன் ஒப் கிறடிட் வசதிகள் மற்றும் கிறடிட் அட்டைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி பல்வேறு வழிகளில் உங்கள் வியாபாரத்தை நீங்கள் நடத்தலாம். ஆனால் கடன் வளர வளர உங்கள் வியாபாரம் பாதிப்படையும் என்பதையும் உணரவேண்டும்.

உங்கள் கடன் சுமைகளை குறைப்பது வியாபாரத்திற்கு நல்லது. உங்களுக்கு குறைந்த கடன் இருப்பது வியாபாரத்தில் அதிக இலாபத்தை எட்டக் கூடியதாக இருக்கும்.

(1) சந்தைப் படுத்தல் என்பது உங்கள் வர்த்தகத்தை முன்னேற்றுவதற்கு உரிய இறுதி முயற்சியாகும். அநேகமான சந்தைப்படுத்துவோர், ஒரே வழியில் மட்டுமே சிந்தித்து செயற்படுவார்கள். இது வியாபாரத்தின் வளர்ச்சிக்கு நல்லதல்ல. சந்தைப்படுத்துகின்ற பணிகளைச் செய்பவர்கள் வியாபாரத்தை படிப்படியாக முன்னேற்றும் வகையில் ஆலோசனை சொல்பவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் மனதில் உள்ள உண்மையான சிந்தனையும் உங்கள் வியாபாரத்தை அபாரமான அளவிற்கு வளர்ச்சியடைச் செய்யும்.

2) உங்களிடம் உள்ள உத்திகளை பயன்படுத்துவதும் உ ங்கள் வியாபாரத்தை வளர்ப்பதற்குரிய நல்ல முயற்சியாகும் நீங்கள் ஒரு சந்தைப்படுத்துபவராக உங்கள் வர்த்தகத்தில் புதிய உத்திகளைப் பயன்படுத்துவது உங்கள் வாடிக்கையாளர்களையும் கவரும். இவ்வாறான முயற்சியில் ஈடுபடுவதற்கான அணுகுமுறைகளை தொடர்ந்து உருவாக்கினால் உங்களுக்கு உத்திகள் தோன்றுவதற்கு தடையே இருக்காது.

3) உங்கள் கடன் பற்றிய விபரங்களை எடுத்துக் கொள்ளுங்கள் உங்கள் கடன்கள் எல்லாவற்றையும் வட்டியோடு சேர்த்து மாதந்தோறும் திருப்பிச் செலுத்தவும். கிறடிற் அட்டைகளுக்கு செலுத்த வேண்டிய தொகை உட்பட வர்த்தககத்தில் நிலுவையில் உள்ள கொடுப்பனவுகளும் சரி செய்யப்பட வேண்டியவையாகும். இந்த நடைமுறையானது, கடன்களைச் சமாளிப்பதற்கான வழிகளாகும். சில வல்லுநர்கள் அதிக வட்டியுடன் பெறப்படும் கடன்தொகையை சிபார்சு செய்கிறார்கள்.

(4) நீங்கள் தொடர்ச்சியாக சந்தைப்படுத்தல் முறையில் எப்போதும் பணம் செலவழிக்கின்ற சந்தைப்படுத்தலில் ஈடுபட்டால் பணத்தை இழக்க வேண்டி வரும் மேலும் அதை மீளப்பெற என்ன ஆகும் என்பதை நீங்கள் கண்டுகொள்வது மிகவும் அவசியமானது.

5) நீங்கள் உருவாக்கும் திறன் கொண்டவராக இருக்க வேண்டும்: நீங்கள் உங்கள் வணிகத்தை வளர்ப்பதற்கு பல விதமான வழிகளைப் பின்பற்ற வேண்டும். சந்தைப்படுத்தலிலும் பல வழிகளைப் பாவிக்க வேண்டும். ஏனெனில் ஒன்றோ அல்லது இரண்டோ சந்தைப்படுத்தும் வழிகள் இருந்தால் உங்கள் வியாபாரத்தை ஆட்டம் காணும் நிலையில் தான் வைத்திருக்க வேண்டிவரும். இதனால் உங்கள் வியாபாரத்தின் வளர்ச்சி ஆபத்தான நிலைக்குச் செல்லும். எவ்வாறாயினும் உங்கள் வியாபாரம் ஒரு தனியான சந்தைப்படுத்தல் உத்தியோடு நல்ல நிலையில் நடந்தாலும் பல வழிகளில் பணம் சம்பாதிக்கக் கூடிய வழிகளைத் தேட வேண்டும். உதாரணமாக அச்சு விளம்பரங்கள் மற்றவர்களோடு இணைந்து விளம்பரம் செய்தல் மற்றும் பத்திரிகை அறிக்கைகள் மூலமான இலவச விளம்பரங்களைச் செய்தல் ஆகியவற்றையும் தபால் மூலமான கடிதங்களையோ அன்றி விளம்பர நோட்டீஸ்களையோ அனுப்பலாம். அத்துடன் தொலைபேசி மூலமான அழைப்புக்களையும் மேற்கொள்ளலாம்.

ஒன்றோ அல்லது இரண்டோ சந்தைப்படுத்தும் முறையை நீங்கள் வைத்திருந்தால், உங்கள் வியாபாரம், ஆபத்தானதும் பாதுகாப்பு இல்லாததுமான இடத்திற்கு செல்ல வாய்ப்பு உண்டு. கடன் சுமையை அதிகரிக்கும். எனவே உங்கள் வியாபார உத்திகளை பல பிரிவுகளில் கொண்டுவர கற்றுக் கொள்ள வேண்டும்.

நீங்கள் வியாபார உத்திகள் பலவற்றை வளர்த்துக் கொள்ளும்போது, நீங்கள் இன்னும் பணத்தை மாத்திரமல்ல வியாபாரத்தையும் வளர்க்க உதவும். இந்த வழியின் மூலம், உங்கள் வியாபார நிலையம் வங்குரோத்து நிலைக்குச் செல்வதைத் தவிர்க்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு வியாபாரத்தை நடத்துவதற்கு ஒரு கடனை நீங்கள் பயன்படுத்தி, சரியான நேரத்திற்கு கடனாளிகளின் பணத்தைச் மீளச் செலுத்தினால், மன அழுத்தம் இருக்காது. இவ்வாறாக உங்களிடம் கடன் அல்லது கடன் சிக்கல்கள் இருந்தால் www.gtacredit.com என்ற இணையத்தளத்தைப் பார்வையீடவும் அல்லது (4160 489-2000 என்னும் தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்.


MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |




Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

# ஜெனீவாவை நோக்கி பிரித்தானியாவில் நடந்த உண்ணாவிரதம்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**சி**ல வாரங்களுக்கு முன் சூம் செயலியின் மூலம் நிகழ்ந்த ஒரு மெய்நிகர் கருத்தரங்கில் புலம்பெயர்ந்து வாழும் சிங்கள புலமைச்செயற்பாட்டாளரான யூட் லால் பெர்ணான்டோ ஒரு விடயத்தை அழுத்தமாகச் சொன்னார் “கடந்த பதினோரு ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வெற்றி எதையும் பெறவில்லை” என்று.

அவர் கூறியது உண்மையே என்பதைத்தான் கடந்த வாரம் பிரித்தானியாவில் சொதப்பலாக முடித்து வைக்கப்பட்ட உண்ணாவிரதம் நிரூபித்திருக்கிறதா?

பிரித்தானியாவில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த பெண்மணி தனது உண்ணாவிரதத்தை இடையில் நிறுத்திக் கொண்டார். அவருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் கூறிக்கொண்டாலும் அவருடைய பிரதான கோரிக்கைகள் எவையும் பெரும்பாலும் நிறைவேற்றப்படவில்லை என்பதே உண்மை. ஒரு கோரிக்கை மட்டும் ஓரளவுக்கு நிறைவேற்றப்படக்கூடும் என்ற தோற்றம் உத்தேச ஜெனிவா தீர்மான வரைபில் காணப்படுகிறது. சாட்சிகளையும் ஆதாரங்களையும் திரட்டுவதற்கான ஒரு பொறிமுறை பற்றியதில் கூறப்படுகிறது. ஆனால் அங்கேயும் கூட பிரச்சினை உண்டு. சிரியாவில் உருவாக்கப்பட்ட அத்தகைய ஒரு பொறிமுறை ஐநா. பொதுச்சபையில் கீழ்தான் உருவாக்கப்பட்டது. ஆனால் இங்கேயோ இலங்கை தீவில் அப்படி ஒரு பொறிமுறை எப்படி அமையும் என்பதைப் பற்றிய தெளிவான சித்திரம் கிடைக்கவில்லை. அது பெருமளவுக்கு மனித உரிமைகள் சபையின் கீழ்தான் அமையலாம் என்று விளங்கிக்கொள்ளப்படுகிறது.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக ஈழத்தமிழர்கள் மத்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட சாகும் வரையிலான உண்ணா விரதங்கள் அனேகமானவை இப்படித்தான் முடிவடைந்தன. அந்த உண்ணாவிரதங்களை முன்னெடுத்த அனேகர் இறுதிவரை போராடி சாகத் தயாராக இருக்கவில்லை. அதற்காக இக்கட்டுரை உண்ணாவிரதிகள் சாகவேண்டும் என்று கேட்கவில்லை. ஆனாலும் சாகும் வரை உண்ணாவிரதம் எனப்படுவது ஒரு கடைசி ஆயுதம். அதை கையில் எடுப்பவர்கள் அந்தப் போராட்டத்தை இறுதிவரை கொண்டு போகக்கூடிய துணிச்சலும் திடசங்கற்பமும் மிக்கவர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் தமிழ் மக்களின் போராட்டங்களை உலகம் பகிடியாகவே பார்க்கும். அதேசமயம் அப்போராட்டத்தின் முடிவு தமிழ் மக்களுக்கு ஒரு மிகப்பெரிய வெற்றிடத்தை உணர்த்தியிருக்கிறது. எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறியதுபோல தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு என்ற கேள்வியை அது புதுப்பித்திருக்கிறது. தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தை முழு உலகத்தின் கவனத்தையும் இலங்கை அரசாங்கத்தின் கவனத்தையும் ஈர்க்கத்தக்க விதத்தில் முன்னெடுப்பதற்கு ஒரு பொருத்தமான பொதுக்கட்டமைப்பு தமிழ் மக்கள் மத்தியில் இல்லை. அவ்வாறான ஒரு கட்டமைப்பு இல்லாத வெற்றிடத்தில்தான் யார்யாரோ தமிழ் மக்களை தத்தெடுக்கிறார்கள். யார்யாரோ தன்னார்வமாக போராடுகிறார்கள்.யார்யாரோ மக்கள் போராட்டங்களுக்கு உரிமை கோருகிறார்கள். அரசற்ற தமிழ் மக்களுக்கு உலகம் முழுவதும் எத்தனை அம்பாசிடர்கள்?

இதுதான் பிரச்சினை இந்த வெற்றிடத்தைத்தான் இடையில் நிறுத்தப்பட்ட மேற்படி உண்ணாவிரதமும் நிரூபித்திருக்கிறதா? எனவே கடந்த பதினோரு ஆண்டுகளுக்கும் மேலாக நடத்திய போராட்டங்கள் குறித்து தொகுத்துப் பார்க்க வேண்டிய ஒரு கட்டாயம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்த உண்ணாவிரதம் மட்டுமல்ல காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முன்னெடுத்த உண்ணாவிரதம் சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகள் முன்னெடுத்த உண்ணாவிரதம் உள்ளடங்களாக கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் போராடி வருகிறார்கள். இந்தப் போராட்டங்களில் பெரும்பாலானவை ஜெனிவா கூட்டத்தொடரை மையமாகக் கொண்டவை. ஆனால் இப்போராட்டங்களின் விளைவாக ஜெனிவா தீர்மானங்களில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் திருப்திகரமான மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை மட்டுமல்ல இப்போராட்டங்களின் விளைவாக அரசியல் கைதிகளையும் விடுவிக்க முடியவில்லைகாணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் நீதி கிடைக்கவில்லை நிவாரணமும் கிடைக்கவில்லை.

காணிகளுக்கான போராட்டம் தொடக்கத்தில் சில வெற்றிகளைப் பெற்றது. கேப்பாபிலவில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் காணிகளை விடுவிப்பதற்கான போராட்டத்தில் சில தொடக்க வெற்றிகள் கிடைத்தன. ஆனால் அதற்குப்பின் போராட்டங்களும் சோர்ந்து விட்டன. அதுமட்டுமல்ல இப்பொழுது நில ஆக்கிரமிப்பு புதிய வடிவத்தில் புதிய வேகத்தில் முன்னெடுக்கப்படுகிறது. அதைப்போலவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டமும் தெருவோரங்களில் கவனிக்கப்படாத ஒன்றாக மாறியிருக்கிறது. அரசியல் கைதிகள் தொடர்ச்சியாக போராடி வருகிறார்கள். ஆனால் அரசாங்கம் வழமையான நீதிமன்ற நடைமுறைகளின்படிதான் சில கைதிகளை விடுதலை செய்திருக்கிறது.

எனவே தொகுத்துப் பார்த்தால் கடந்த பதினோரு ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்கள் மத்தியில் நடந்த எந்த ஒரு போராட்டமும் ஏன் இறுதி வெற்றியை பெறவில்லை என்ற கேள்விக்கு தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் கருத்துருவாக்கிகளும் விடைகாண வேண்டும்.

மேலும் கெடுபிடி போருக்குப் பின்னரான தகவல் புரட்சியின் விளைவாக ஏற்பட்டிருக்கும் சமூகவலைத்தளங்களின் காலத்தில் மக்கள் போராட்டங்கள் உலகம் முழுவதும் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன? அவற்றில் வெற்றி பெற்றவை எத்தனை? வெற்றி பெறாதவை எத்தனை? என்பது குறித்தும் ஒரு தொகுக்கப்பட்ட பார்வை அவசியம். சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவின் வோல் ஸ்ட்ரீட்ற்றை முற்றுகையிட்டு ஒரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாதக்கணக்காக நடந்த அந்த போராட்டம் வெற்றி பெறவில்லை. போராடியவர்கள் ஒருகட்டத்தில் சோர்ந்துபோய் தாமாக போராட்டத்தை கைவிட்டார்கள்.

அப்படித்தான் இப்போது டெல்லியில் போராடிக்கொண்டிருக்கும் விவசாயிகளும் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத ஒருநிலையில் போராட்டக்களத்துக்கு அருகே நீண்ட காலம் தங்கியிருந்து போராடத்தக்க ஏற்பாடுகளை செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். தமக்குரிய தற்காலிக வீடுகளை அவர்கள் கட்டி வருவதாக கடந்த வாரம் செய்திகள் கிடைத்தன. ஒரு படை நடவடிக்கையில் யுத்தகளத்தில் கைப்பற்றிய இடங்களில் படைத்தரப்பு தற்காலிகமான வசிப்பிடங்களை ஏற்படுத்தி தரித்து நிற்பதைபோல சாத்வீக போராட்டங்களிலும் அவ்வாறு தற்காலிக வசிப்பிடங்களை ஏற்படுத்தி தங்கியிருந்து போராட வேண்டிய ஒரு காலகட்டம் உருவாகி விட்டதா?

வோல் ஸ்ட்ரீட் போராட்டம் டெல்லி விவசாயிகளின் போராட்டம் இரண்டிலும் ஒரு வி'யத்தை கற்றுக்கொள்ள வேண்டும். போராட்டக்காரர்களை அரசாங்கங்கள் தடுத்து நிறுத்தவோ நசுக்கவோ பெருமளவுக்கு முயற்சிக்கவில்லை. போராட்டங்களை அவற்றின் பாட்டிலேயே கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகின்றன. அவை தாமாக சோர்ந்து விடும் என்று அரசுகள் நம்புகின்றன. ஒரு போராட்டத்தை நசுக்க நசுக்க அது மேலும் வேகம்கொள்ளும் வீரியம் பெறும். அதற்கு உலகக் கவனிப்பும் ஊடக கவனிப்பும் கிடைக்கும். அதுதான் Covid-19 சூழலுக்கு சற்றுமுன் நடந்த கொங்க்ஹோங் போராட்டத்திற்கு நடந்தது.

ஆனால் அரசியல் போராட்டங்களை நசுக்க முற்படாமல் கண்டும் காணாமல் விட்டால் போராட்டங்களுக்கு என்ன நடக்கும்? ஒருகட்டத்தில் தாமாக சோர்ந்துவிடும் என்று அரசுகள் நம்புகின்றனவா?

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்கள் அப்படி ஒரு கட்டத்தைத்தான் அடைந்துவிட்டன. இடைக்கிடை கவனயீர்ப்பு போராட்டங்களை அன்னையர் முன்னெடுக்கிறார்கள். ஆனாலும் தெருவோரங்களில் ஆண்டுக்கணக்கில் குந்திக் கொண்டிருக்கும் அன்னையரை அரசாங்கமும் கண்டுகொள்ளவில்லை. உலகமும் கண்டுகொள்ளவில்லை. இவை எல்லாவற்றையும் விட கொடுமையானது. அவர்களுடைய சொந்தமக்களும் கண்டு கொள்ளவில்லை என்பதுதான். இப்போராட்டங்கள் அவற்றின்பாட்டில் போய்க்கொண்டேயிருக்கின்றன. தமிழ் மக்கள் தங்கள் பாட்டில் போய்க்கொண்டேயிருக்கிறார்கள். இப்போராட்டங்களை அரசாங்கம் பெருமளவுக்கு தடுக்கவில்லை. அதன் மூலம் அவை ஒரு கட்டத்தில் தாமாகவே சோர்ந்து விடும் அல்லது வயதான பெற்றோர் படிப்படியாக இறந்துபோக போராட்டம் கைவிடப்பட்டுவிடும் என்று அரசாங்கம் நம்புகின்றதா?

எனவே இதுபோன்ற போராட்டங்களில் இருந்து தமிழ் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.அதேசமயம் Covid-19 சூழலுக்கு முன்னதாக ஹொங்கொங்கில் மக்கள் தெருக்களில் திரண்டு நின்று போராடினார்கள். ஆனால் மேற்கத்திய ஊடகங்கள் அந்த போராட்டத்தை நோக்கி பெருமளவுக்கு கவனத்தை குவித்தன. ஆனால் Covid-19 பெருந் தோற்றோடு அப்போராட்டம் பின் தள்ளப்பட்டுவிட்டது.அதிலிருந்தும் தமிழ் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், தமிழ் மக்கள் கடந்த சில மாதங்களுக்குள் நடந்த அரசியல் நிகழ்வுகளில் இருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும். கடந்த பெப்ரவரி மாதம் நடந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான ஊர்வலம் ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது. ஆனால் அதற்குப்பின் நடக்கும் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டங்கள் ஊர்வலங்கள் போன்றன வழமைபோல கவனயீர்ப்புப் போராட்டங்களாக குறுகக் காரணம் என்ன? அதேசமயம் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி பேரணிக்குக் கிடைத்த வெற்றிக்கு காரணம் என்ன? ஏற்கனவே இல்லாத ஒரு சிவில் அமைப்பு அதைத் தொடங்கிய சில நாட்களிலேயே முன்னெடுத்த ஒரு போராட்டம் அவ்வாறு எதிர்பாராத வெற்றியைப் பெறக் காரணம் என்ன? இது தொடர்பில் ஏற்கனவே எனது கட்டுரைகளில் நான் எழுதியிருக்கிறேன். தமிழ் மக்கள் போராடத் தயாராக இருக்கிறார்கள். பொருத்தமான அரசியல் தரிசனத்தோடு சரியான போராட்ட வடிவத்தை முன்வைத்து பொருத்தமான தலைமைகள் துணிந்து முன்வந்தால் தமிழ் மக்கள் பின்னே வருவார்கள்.

ஆனால் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை பேரணிக்கு பின்னரும் அப்படிப்பட்ட கட்டமைப்புக்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை. பேரணியை முன்னெடுத்த சிவில்சமூக செயற்பாட்டாளர்கள் அந்தப் பேரணியின் பெயரால் ஒரு மக்கள் இயக்கத்தை உருவாக்க போவதாக பிரகடனம் செய்தார்கள். ஆனால் அந்தப் பிரகடனம் இன்று வரையிலும் ஒரு காகிதப் பிரகடனமாகவே காணப்படுகிறது. அப்படி ஒரு அமைப்பு இன்று வரையிலும் கட்டி எழுப்பப்படவில்லை. ஆனால் அறிக்கைகள் வருகின்றன. அந்த அமைப்பை கட்டியெழுப்புவதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் எவையும் ஏன் இதுவரையிலும் முன்னெடுக்கப்படவில்லை? அதிலிருந்தும் தமிழ் மக்கள் கற்றுக்கொள்ளவேண்டும்.

எனவே கடந்த 12 ஆண்டுகால தாயகம் மற்றும் டயஸ்போரா தமிழகம் ஆகிய மூன்று பரப்புக்களின் அனுபவங்களை தொகுத்து ஆராய வேண்டும். இது தொடர்பில் ஒரு சுய விசாரணை அவசியம். இல்லையென்றால் போராட்டங்களை தத்தெடுக்க முயலும் புலம்பெயர் தரப்புகளின் காசும் வீணாகி தாயகத்தில் போராட முன்வரும் கொஞ்ச நஞ்ச செயற்பாட்டாளர்களும் சோர்ந்துபோய் முடிவில் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டம் உலகத்தின் கவனத்தை ஈர்க்காத சிறு கவனயீர்ப்புப் போராட்டங்கள் ஆக சுருங்கிப் போகும் ஆபத்து உண்டு.

எனவே இக்கட்டுரை கடந்த பன்னிரண்டு ஆண்டு காலத்தை முன் வைத்து அரசியல்வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களை நோக்கி பின்வரும் கேள்விகளை கேட்கிறது.

முதலாவது கேள்வி கடந்த 12 ஆண்டுகளாக தமிழ்மக்களின் அகிம்சைப் போராட்டங்கள் ஏன் இறுதி வெற்றி பெறவில்லை?

இரண்டாவது கேள்வி ஆயுதப் போராட்டம் ஏன் தோற்கடிக்கப்பட்டது என்பது குறித்து சரியான விடைகளை கண்டுபிடிக்காத ஒரு வெற்றிடத்தில் அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுப்பதுதான் அதற்கு காரணமா? அதாவது இறந்த காலத்தில் இருந்து பாடங்கற்கத் தவறியதன் விளைவா?

# 80 வயதுக்கு மேற்பட்டோருக்கு கோவிட் – 19 தடுப்பூசிகளை வழங்குவதற்கு தயாராகின்றது ஒன்ராறியோ அரசு

ஒன்றாரியோ மாகாணத்திற்குள் வாழும் 80 வயதுக்கு மேற்பட்டோருக்கு கோவிட்-19 தொற்று தடுப்பு ஊசிகளை வழங்குவதற்கு ஒன்றாறியோ அரசு மாகாணம் தழுவிய முன்பதிவு மையங்களையும், இணையவழி முன்பதிவுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் மேற்படி வயதினருக்கு தடுப்பூசி வழங்கும் வண்ணம் தயாராக உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி, 80 வயதுக்கு மேற்பட்ட ஒன்ராறியோ வாழ் மக்கள் இப்போது முதலாவது, இரண்டாவது தடுப்பூசி மருந்துகளை பெற்றுக்கொள்வதற்கு **Ontario.ca/bookvaccine** என்ற இணைய முகவரியூடாகவோ, அல்லது 1-888-999-6488 எனும் மானில தடுப்பூசி தகவல் தொலைபேசி எண்ணூடாகவோ முன்பதிவுகளைச் செய்துகொள்ளலாம். முன்பதிவு செய்யும் போது,உங்கள் ஒன்றாறியோ சுகாதார அட்டை, பிறந்த திகதி, அஞ்சல் குறியீடு, மின்னஞ்சல் ஆகியவை கேட்கப்படும்.

**Ontario.ca/bookvaccine** என்ற இணையவழியூடாக முன்பதிவு செய்துகொள்ள முடியாதவர்கள், மானில தடுப்பூசி தகவல் மையத்தினை 1-888-999-6488 என்ற எண்ணில் தொடர்புகொண்டு பதிவுகளைச் செய்துகொள்ளலாம். மேற்படி தகவல் மையம் வாரத்தில் 7 நாட்களும், காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.



80 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதையுடையவர்களுக்கும் அவர்களைப் பராமரிப்பவர்களுக்கும் மட்டுமே தற்போது தடுப்பூசிகள் கொடுக்கப்படுவதால், அனைவரையும் பொறுமையாக இருக்கும்படி வேண்டப்படுவதோடு, இணையவழி அல்லது தொலைபேசி சேவைகளை மட்டுமே பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

விஜய் தணிகாசலம், மாகாண சட்டமன்ற உறுப்பினர்.
ஸ்காபரோ - றூஜ் பார்க் தொகுதி

## Rougly 200000 High School Students would be Vaccinated Soon.
## -Ontario Minister of Education

# ஒன்றாரியோ பாடசாலைகளின் இரண்டு இலட்சம் மாணவர்கள் விரைவில் கோவிட் – 19 தடுப்பூசிகள் பெறுவார்கள் என்கிறார் மாகாண கல்வி அமைச்சர்



"ஒன்றாரியோ மாகாணத்தின் பல பாடசாலைகளில் மாணவர்கள் நேரடியாகச் சென்று கல்வி கற்று வருகின்றார்கள். அவர்களுடைய சுகாதார நலன்கள் மற்றும் பாதுகாப்பு ஆகியவை தொடர்பாக பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கூடியளவு கவனம் எடுத்து தங்கள் கடமைகளைச் செய்கின்றார்கள். அதற்கு மேலாக எமது கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் கூட அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றார்கள். இவ்வாறான நிலையில் தற்போது எமது மாகாணத்தில் பல்வேறு வயதினர்களுக்கு கோவிட்- 19 தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. இதே போன்று பாடசாலைகளில் மாணவர்களைவிட அங்கு பல சவால்களுக்கிடையில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர்களே வயதில் மூத்தவர்கள் ஆவார்கள். எனவே அவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்க எமது அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. எவ்வாறாயினும் எமது பாடசாலைகளில் மாணவர்களையும் நாம் கவனத்தில் எடுக்கின்றோம். இந்தவகையில், பாடசாலைகளில் பயிலும் இரண்டு இலட்சம் மாணவர்களுக்கு உயர் வகுப்பு மாணவர்களுக்கும் விரைவில் கோவிட்-19 தடுப்பூசி ஏற்றப்படும்"

இவ்வாறு தெரிவித்தார், ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் கௌரவ ஸ்டீபன் லெட்சே அவர்கள்.

நேற்று காலை இணையவழி ஊடாக ஒன்றாரியோ மாகாணத்திலுள்ள பல்லின பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களை அவர் சந்தித்தார். அவரோடு இணைந்து மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களான **Robin Martin MPP (Parlimentary Assistant to the Minister of Health kw;Wk; Deepak Anand MPP** ஆகிய இருவரும் இணையவழி ஊடகச் சந்திப்பிற்கு பக்கத்துணையாக செயற்பட்டார்கள்.

மேற்படி இணையவழி சந்திப்பின்போது பஞ்சாபி மொழிப் பத்திரிகையின் ஆசிரியர் முன்வைத்த பாடசாலை மாணவர்கள் தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி கேள்வி தொடர்பாக அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் " மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படுவது தொடர்பாக ஆசிரியர்களோ அன்றி கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களோடு அன்றி சுகாதார பிரிவின் உத்தியோகத்தர்களோ சம்பந்தப்பட்டாலும் முதலில் மாணவர்களின் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் அனுமதியைப் நாம் பெறுவோம். அதன் பின்னரே சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படும்." என்றார்.

பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்படும் மார்ச் மாத விடுமுறை பின்போடப்படுமா அல்லது தவிர்க்கப்படுமா என்ற கேள்வியை முன்வைத்த மற்றுமொரு இந்திய மொழி பத்திரிகை ஆசிரியர் ஒருவர் முன்வைத்த கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் அவர்கள் தற்போது கொரோனா தொற்று சற்று அதிகரிப்பது போல இருந்தாலும் முன்னர் அறிவித்தபடி ஏப்ரல் மாதத்திலேயே அந்த விடுமுறையை அறிவிக்க இருப்பதாகவும் அதற்காக தொடர்ச்சியாக கல்விச் சபைகளின் அதிகாரிகளோடும் சுகாதாரப் பகுதி உயர் அதிகாரிகளோடு உரையாடல்களை நடத்தியும் பின்னர் தொற்றின் அதிகரிப்பை அல்லது தணிவதைக் கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று பதிலளித்தார்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் முன்வைத்த கேள்வியொன்றுக்கும் கல்வி அமைச்சரும் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் தீபக் ஆனந்தும் இணைந்து பதிலளித்தார்.

"ஒன்றாரியோ மாகாணத்திற்கு விநியோகிக்கப்படும் தடுப்பூசிகள் பெறுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டீர்களே, அவ்வாறாயின் தடுப்பூசிகளை ஒன்றாரியோ மாகாண அரசு உற்பத்தியாளர்கள் அல்லது விநியோகஸ்த்தர்கள் ஆகியோரிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்தவற்குரிய ஏற்பாடுகளைச் செய்யலாமே? என்ற கேள்வியே உதயன் பத்திரிகையின் சார்பில் முன்வைக்கப்பட்டது அதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர் கனடாவின் மத்திய அரசே இந்த தடுப்பூசி கொள்வனவை மேற்கொள்வதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது என்றும் அதற்கு காரணம் கடனாவிற்குள் இறக்குமதி செய்யப்பெறும் தடுப்பூசிகள் அங்கீகரிப்பது கனடிய மத்திய அரசின் கீழ் செயற்படும் சுகாதார ஆராய்ச்சி நிறுவனமே என்றும் ஆனால் எமது மாகாணத்திற்குரிய விநியோகத்தை கால தாமதமின்றி செய்யும் படி எமது முதல்வர் டக் போர்ட் அவர்கள் அமெரிக்காவில் உள்ள தடுப்பூசி தயாரிக்கும் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளோடு அடிக்கடி தொலைபேசியில் உரையாடும் வழக்கம் கொண்டவர் என்றும் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து உதயன் பத்திரிகையின் ஆசிரியரை விழித்துப் பேசிய மாகாண பாராளுமன்ற உறுப்பினர் திரு தீபக் ஆனந்த் " தயவு செய்து உங்களுக்கு அறிமுகமான மத்திய அரசு சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் மூலம் அழுத்தம் கொடுப்பதை உங்கள் கடமையாகச் செய்யும் படி கேட்டுக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# ஏப்ரில் 6 இல் தமிழ் நாட்டில் ஆட்சி மாற்றம் சாத்தியமே!

- கனடா நக்கீரன்

தமிழ்நாடு சட்ட சபைக்கான தேர்தல் களை கட்டியுள்ளது. அரசியல் கட்சித் தலைவர்கள் தமிழ்நாட்டைச் சுற்றி அனல் தெறிக்கும் பரப்புரையில் ஈடுபட்டுள்ளார்கள். வழக்கம் போல் போட்டி இரண்டு திராவிடக் கட்சிகளுக்கும் இடையேதான். அதாவது திமுக மற்றும் அதிமுக கூட்டணிக்கு இடையேதான் போட்டி. இந்த இரண்டு சூரியன்களைச் சுற்றியே மற்றக் கட்சிகள் வலம் வருகின்றன. விதிவிலக்காக கமலகாசனின் மக்கள் நீதி மையம், சீமானின் நாம் தமிழர் இயக்கம் தனித்துப் போட்டியிடுகின்றன.

1967 ஆம் ஆண்டு அண்ணா தலைமையில் திமுக மாபெரும் கூட்டணி ஒன்றை அமைத்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றது. அதன் பின்னர் இந்த 54 ஆண்டு காலமாக திராவிடக் கட்சிகளே தமிழ்நாட்டை மாறி மாறி ஆண்டு வந்துள்ளன. இப்போது நடைபெறும் தேர்தலிலும் இந்த இரண்டு கட்சியில் ஒன்றுதான் ஆட்சி அமைக்கப் போகிறது என்பது நிச்சயம் எனலாம்.

முழு இந்தியாவிலும் 1967 முதல் ஒரு மாநிலத்தைத் தொடர்ந்து ஒரு மாநிலக் கட்சியே ஆளும் மாநிலம் தமிழ்நாடு மட்டுமே! அதேபோல் தமிழ், ஆங்கிலம் என இருமொழிக் கொள்கையை கடைப்பிடிக்கும் மாநிலமும் தமிழ்நாடுதான். இந்தியாவல் 29 மாநிலங்களும் 9 யூனியன் பிரதேசங்களும் இருக்கின்றன.

1967 இல் பதவிக்கு வந்த திமுக அதன் பின்னர் 1972, 1989, 1996 மற்றும் 2006 இல் நடந்த தேர்தல்களில் வெற்றி பெற்றது. 1977, 1980, 1984, 1991, 2001, 2011 மற்றும் 2016 இல் அதிமுக வெற்றிபெற்றது. அதாவது திமுக 5 முறையும் அதிமுக 7 முறையும் தேர்தலில் வென்று ஆட்சி அமைத்தன.

பல திமுக தலைவர்கள் மீது, குறிப்பாக கருணாநிதியின் மகள் கனிமொழி மீது 2010 இல் சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளால் கட்சியின் புகழ் சேதமடைந்தது. 2006 ஆம் ஆண்டு திமுக தேர்தல் மாநிலத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவதாக வாக்குறுதி அளித்தது. 2011 சட்டமன்றத் தேர்தலின் போது ஊழல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக திமுக 31 இடங்களில் மட்டுமே வென்றது.

இம்முறை கலைஞர் கருணாநிதி மற்றும் புரட்சித் தலைவி ஜெயலலிதா போன்ற ஆளுமை மிக்க தலைவர்கள் இல்லாத சூழ்நிலையில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. இன்று திமுக சார்பில் தளபதி மு.க. ஸ்டாலின், அதிமுக சார்பில் எடப்பாடி பழனிச்சாமி முதல்வர் வேட்பாளர்களாக களம் இறங்கியுள்ளார்கள்.

தேர்தல் ஆணையம் கொடுத்த தகவலின் அடிப்படையில் தமிழ்நாட்டின் வாக்காளர் தொகை 62,823,749 ஆகும். சட்ட சபைக்கு மொத்தம் 234 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். சோழிங்கநல்லூர் தொகுதிதான் ஆகக் கூடுதலாக 694,845 வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாகும். பல தொகுதிகளில் வாக்காளர் தொகை சராசரி 350,000 - 450,000 ஆகும். இதில் பாதிப் பேர் பெண்கள் ஆவர்.

தமிழக சட்ட சபைக்கு இப்போது நடைபெறும் தேர்தல் பதினாறாவது தேர்தல் ஆகும். 2016 ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையில் தேர்தலில் வெற்றிபெற்று வந்த அதிமுக கட்சியின் பதவிக் காலம் எதிர்வரும் மே 24, 2021 இல் முடிவுக்கு வருகிறது.

தேர்தல் ஆணையம் பின்வரும் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துள்ளது.

| நிகழ்வு | தேதி |
|---|---|
| வேட்பு மனு தாக்கல் | 12 மார்ச் 2021 |
| வேட்பு மனு தாக்கல் செய்யும் கடைசி நாள் | 19 மார்ச் 2021 |
| வேட்பு மனுக்களை சரிபார்க்கும் நாள் | 20 மார்ச் 2021 |
| வேட்பு மனுவைத் மீளப்பெறுவதற்கான கடைசி நாள் | 22 மார்ச் 2021 |
| தேர்தல் நாள் (ஒரேமுறையில்) | 6 ஏப்ரில் 2021 |
| வாக்குகள் எண்ணப்படும் நாள் | 2 மே 2021 |
| தேர்தல் நிறைவடையும் நாள் | 24 மே 2021 |

இப்போது தமிழ்நாடு பற்றிய சில தரவுகளைப் பார்ப்போம்.

மாநில தலைநகரம் - சென்னை
மாவட்டங்கள் - 38
நிலப்பரப்பு - 130,058 ச.கிமீ (இலங்கை - 65610 ச.கிமீ)
மக்கள் தொகை 2021 (மதிப்பீடு) - 78.8 மில்லியன் (7.88 கோடி)
மாநில மொழிகள் - தமிழ் ரூ ஆங்கிலம்
சராசரி கல்வியறிவு விழுக்காடு: 80.09 %
மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி - அமெரிக்க கூ 207.79 பில்லியன் (2016–17)
முக்கிய நகரங்கள்: சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ரூ திருநெல்வேலி. (மக்கள் தொகைப் படி)
தமிழ்நாடு, இந்தியாவின் மக்கள் தொகையில் (2020) 5.96 %.
எல்லைகள் - மேற்குப் பகுதியில் கேரளா, வடக்கே ஆந்திரா மற்றும் வடமேற்கில் கர்நாடகா.

திமுக மற்றும் அதிமுக அணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கான தொகுதிப் பங்கீடு பின்வருமாற அமைந்துள்ளது. தமிழ்நாடு பெரியார் மற்றும் அண்ணா பிறந்த மண். பெரியார் பகுத்தறிவு, சாதி ஒழிப்பு, சுயமரியாதை இயக்கம் என வாழ்நாள் முழுதும் தமிழ்நாட்டின்

திமுக கூட்டணி

| கட்சிகள் | தொகுதி |
|---|---|
| திமுக | 173 |
| தேசிய காங்கிரஸ் | 25 |
| கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) | 6 |
| கம்யூனிஸ்ட் (இந்திய) | 6 |
| விடுதலைச் சிறுத்தைகள் | 6 |
| மதிமுக | 6 |
| இந்திய முஸ்லிம் லீக் | 3 |
| தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சி | 1 |
| ஏனையோர் | 8 |
| மொத்தம் | 234 |

பட்டி தொட்டிகள் எல்லாம் வலம் வந்து உழைத்தவர். இருந்தும் தரை மட்டத்தில், சாதி உணர்வுகள் இருக்கவே செய்கின்றன.

"சாதிகள் இல்லையடி பாப்பா" என்பது பாடபுத்தகத்தில் பாப்பாக்களுக்கு மட்டுமானதாக ஆகிவிட்டது. குறிப்பாக தேர்தல் அரசியலில் சாதிக்குத் தனித்த இடம்

அதிமுக கூட்டணி

| கட்சிகள் | தொகுதி |
|---|---|
| அதிமுக | 179 |
| பாமக | 23 |
| பாரதிய ஜனதா | 20 |
| தமிழ் மாநில காங்கிரஸ் | 6 |
| ஏனையோர் | 6 |
| மொத்தம் | 234 |

உண்டு. வேட்பாளர் தேர்வு மட்டுமின்றி அமைச்சர் பொறுப்பு ஒதுக்குவதுவரை சாதிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இதனால் தமிழ்நாட்டில் சாதி அரசியலே நடக்கிறது எனச் சொல்லலாம். சில கட்சிகள் சாதிப் பெயரிலையே இயங்குகின்றன. எடுத்துக் காட்டாக பாட்டாளி மக்கள் கட்சி (பாமக) வன்னிய குலத்தினரது கட்சியாகும். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலித் குலத்தைச் சார்பு படுத்தும் கட்சியாகும். ஒரு தொகுதியில் ஒரு வேட்பாளரை நிறுத்தும் போது அந்தத் தொகுதியில் எந்தச் சாதி பெரும்பான்மையாக இருக்கிறதோ அந்தச் சாதியைச் சேர்ந்த ஒருவரே அநேகமாக கட்சி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.



குடிக் கணக்கெடுப்பில் வன்னியர் 15.1 %, பறையர் 12 %, கொங்கு வேளாளர் 6%, பள்ளர் 4.8%, செங்குந்தர் கைக்கோள முதலியார் 4.0 % காணப்படுகின்றனர். இந்து நாடார் 3.5 % உள்ளார்கள். மேலும் கள்ளர் 2.5%, மறவர் 1.0%, அகம்படியார் 1.2 0% ஆகிய மூன்று சமூகத்தினரும் முக்குலத்தோர் என அழைக்கப்படுகிறார்கள். ஆனால் முக்குலத்தோர் என்னும் பெயருக்கு தமிழக அரசால் இன்னும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை. முக்குலத்தோர் மற்றும் தேவர் என்ற சொற்கள் ஒத்த பொருளில் பயன்படுத்தப் படுகின்றன. மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் ஆர். முத்துலட்சுமியின் கூற்றுப்படி, தேவர் என்பது "தெய்வீக இயல்புடையவர்கள்" என்றும் முக்குலத்தோர் என்றால் "மூன்று குலங்கள் ஒன்றிணைந்தன" என்றும் பொருள் ஆகும்.

எம்ஜிஆர் அதிமுக கட்சியைத் தொடங்கியபோது திமுகவின் சாதி ஒழிப்பு சுயமரியாதை திருமணச் சட்டம் போன்ற சீர்திருத்த நடவடிக்கைகளில் பெரிய அளவில் ஈடுபாடில்லாத சமூகங்கள் எம்ஜிஆர் பின் அணி திரண்டன. குறிப்பாக முக்குலத்தோர் (பிரான்மலை கள்ளர், கொண்டைய கொட்ட மறவர்) கொங்கு வேளாள கவுண்டர் போன்றோர்களின் வாக்குகள் எம்ஜிஆருக்கு சாதகமாகின. பார்ப்பன எதிர்ப்பில் தீவிரம் காட்டும் சமூகங்களான தஞ்சாவூர் கள்ளர், வட தமிழகத்திலுள்ள வன்னியர், முதலியார் போன்ற சமூகங்கள் திமுக ஆதரவில் நிலைத்து நின்றன. காங்கிரசு வாக்கு வங்கியாக இருந்த ஆதிதிராவிடர்களும் கணிசமாக எம்ஜிஆருக்கு ஆதரவளித்தனர். மதுரை வீரன் படத்தில் இருந்தே எம்ஜிஆர் மீது காதல் வயப்பட்டிருந்த அருந்ததியர்கள் அப்படியே அவரது பக்கம் சாய்ந்தனர்.

எம்ஜிஆர், ஜெயலலிதா, எடப்பாடி பழனிச்சாமி அமைச்சரவையில் முக்குலத்தோருக்கு அவர்களது குடித்தொகைக்கு மேலாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது. 2016 சட்டசபை தேர்தலில் தேவர் சமூகத்தைச் சேர்ந்த 20 பேர் எம்எல்ஏக்களாகினர். ஆனால் இவர்களில் 9 பேருக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது. 19 எம்எல்ஏக்கள் கொண்ட வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் 5 பேர் மட்டுமே அமைச்சர்கள் ஆனார்கள்.

மேலும் 31 எம்எல்ஏக்களைக் கொண்ட தலித் சமூகத்தில் 3 பேருக்கும் 28 எம்எல்ஏக்களைக் கொண்ட கவுண்டர் சமூகத்துக்கு 5 பேரும் மட்டுமே அமைச்சர்கள். அத்துடன் ஜெயலலிதாவின் முதல்வர் பதவிக்கு சிக்கல் வந்தபோதெல்லாம் தேவர் சமூகத்தைச் சேர்ந்த ஓ. பன்னீர்செல்வம்தான் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்.

இப்போதுள்ள தமிழக முதலமைச்சர் எடப்பாடி அமைச்சரவையில் தேவர் சமூகத்தைச் சேர்ந்த 9 பேர், கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த 5 பேர், வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த 4 பேர் இடம்பெற்றுள்ளார்கள்.

எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் பொன், பொருள், நிலபுலம், கல்வி போன்றவற்றில் முன்னேறிய சமூகங்கள் தமிழ்நாட்டு அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதுதான் யதார்த்தம். தமிழக தேர்தலில் சாதி வகிக்கும் பாத்திரத்தை உணர்த்தவே சமூகக் கண்ணோட்டத்தில் இந்தத் தரவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இம்முறை விஜயகாந்த் அவர்களின் தேமுதிக, அதிமுக கூட்டணியில் இருந்து வெளியேறி டிடிவி தினகரன் தலைமை தாங்கும் அமமுக கட்சியோடு கூட்டணி வைத்து 60 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இது அதிமுக க்கு ஒரு பின்னடைவாகக் கணிக்கப்படுகிறது. நடிகர் கருணாஸ் தலைமையில் இயங்கும் முக்குலத்தோர் புலிப்படையும் வெளியேறியுள்ளது. வெளியேறியதோடு நிற்காமல் திமுக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

போட்டி கடுமையாக இருக்கும் பட்சத்தில் சின்னக் கட்சிகளின் வாக்குகள் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் சக்தியாக மாற நிறைய வாய்ப்பு இருக்கிறது.

பாரதிய ஜனதா கட்சி அதிமுக கட்சியுடன் கூட்டணி வைத்து 20 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியோடு 5 தொகுதிகளில் நேரடிப் போட்டி போடுகிறது. மத்திய அரசு இம்முறை எப்படியும் தமிழ்நாட்டு சட்ட சபைத் தேர்தலில் கால் பதித்து விட வேண்டும் எனப் பாடுபடுகிறது.

இந்தித் திணிப்பு, சமஸ்கிருதத் திணிப்பு போன்றவற்றை திணிக்கும் பாஜக, அதிமுகவுக்கு பலமா அல்லது பாரமா என்பதைத் தேர்தல் முடிவுகள் வெளியாகும் போதுதான் தெரிய வரும்.

வழக்கம் போல் திமுக மற்றும் அதிமுக பல இலவசங்களை அள்ளி வீசியிருக்கின்றன. தேர்தலில் பணம், வேட்டி, சேலை சமையல் பாத்திரங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் தங்கு தடையின்றி வழங்கப் படுகின்றன.

காவல்துறையின் பறக்கும் படை வாகனங்களை மடக்கி சோதனை செய்கிறது. ரூபா 50,000 க்கு மேல் தக்க ஆவணம் இல்லாமல் கொண்டு செல்லப்படும் பணம், தங்கம் குக்கர் போன்ற பரிசுப் பொருட்கள் கைப்பற்றப் படுகின்றது. பறக்கும் படையினர் நடத்திய சோதனைகளில், இதுவரை, 109.45 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பொருட்கள் பிடிபட்டுள்ளன. இதில் ரொக்கப் பணம் மட்டும் 43.67 கோடி ரூபாய் சிக்கியுள்ளது. இந்தியா ஏழை நாடு என்று யார் சொன்னது?

பிடிபட்ட பணம் மற்றும் பொருட்களுக்கு தக்க சான்றுகளைக் காட்டி, அவை நேர்மை யானவை என்று உறுதி செய்தால் பறிமுதல் அவை மாவட்ட ஆட்சியர்களினால் திருப்பி வழங்கப்படும்.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போது ஒவ்வொரு கட்சியும் எத்தனை தொகுதிகளில் யார், யார் போட்டியிடுகிறார்கள் என்ற விபரம் வந்து கொண்டிருக்கின்றன. இம்முறை வாய்ப்பு மறுக்கப்பட்ட ஒரு அதிமுக எம்எல்ஏ டிடிவி தினகரன் தலைமையிலான அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து அந்தக் கட்சியில் போட்டியிடுகிறார்.

தமிழ்த் தேசியம் பேசும் சீமானின் நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டியிடுகிறது. அதே போல் நடிகர் கமலஹாசனின் மக்கள் நீதிமன்றம் நடிகர் சரத்குமார் அவர்களது அகில இந்திய சமத்துவக் கட்சியோடு கைகோர்த்து தேர்தல் களத்தில் இறங்கியுள்ளது. இந்தக் கட்சிகளது வாக்கு வங்கி 3 % மேல் உயராது என்பதுதான் யதார்த்தம் ஆகும்.

தேர்தல் முடிவுகள் வெளிவர மே 2 வரை காத்திருக்க வேண்டும். கருத்துக் கணிப்புக்கள் திமுக அணி ஆட்சியைப் பிடிக்கும் எனக் கூறுகின்றன.

மார்ச் 15 இல் **ABP News- CVoter** எடுத்த கருத்துக் கணிப்பின் படி திமுக கூட்டணி 43 மூவாக்குகளும் அதிமுக கூட்டணி 30.6% வாக்குகளும் கிடைக்கும் எனச் சொல்லப்படுகிறது.

இதே சமயம் அடுத்த முதல்வர் ஸ்டாலினா அல்லது எடப்பாடி எடப்பாடி பழனிச்சாமியா என்ற கேள்விக்கு 40 % ஸ்டாலின் முதல்வராக வருவார் என்றும் 29.7 % எடப்பாடி பழனிச்சாமி வருவார் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

வாக்காளர்களின் கரிசனை என்ன? தமிழ்நாட்டில் வேலையின்மையே முக்கிய சிக்கலாக உள்ளது என்று 32.8% மக்கள் கருத்து தெரிவித்தனர். அதேபோல மின்சாரம் மற்றும் நீர்ச் சிக்கல் இருப்பதாக 11.6% மக்களும் சட்ட ஒழுங்கில் சிக்கல் இருப்பதாக 10.4% மக்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். யாரும் ஊழல் ஒரு சிக்கல் என்று சொல்லவில்லை!

தேர்தல் கருத்துக் கணிப்பு முற்றிலும் சரியென்று எடுக்கக் கூடாது. கடந்த காலங்களில் கருத்துக் கணிப்பு பிழைத்திருக்கிறது. அதே நேரம் அதனைத் தள்ளவும் முடியாது.

ஆனால் அதிமுக தமிழ்நாட்டை 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக

2021 தமிழ்நாடு தேர்தல் கருத்துக் கணிப்பு

| தேதி | ஊடகம் | திமுக+ | அதிமுக+ | அமமுக | மக்கள் நீதி மையம் | நாம் தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 January 2021 | ABP News- CVoter | 112-130 | 120-130 | 1 - 3 | 0 - 4 | 1-3 | 0 - 4 |
| 18 January 2021 | IANS | 75 | 162 | 2 | 3 | 4 | 2 |
| 27 February 2021 | ABP News -CVoter | 154-162 | 58-66 | 1 - 5 | 2-6 | 2-5 | 2 - 5 |
| 8 March 2021 | Times Now - CVoter | 158 | 55 | 3 | 5 | 5 | 3 |
| 8 March 2021 | Times of India | 158 | 66 | | - | - | - |
| 15 March 2021 | ABP News- CVoter | 161-169 | 53-61 | 1-5 | 2-6 | - | 3-7 |

ஆண்டுவிட்டது. ஆட்சியாளர் மீது கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. பல அமைச்சர்களின் சொத்து மதிப்பு பல மடங்கு அதிகரித்துள்ளது.

எடுத்துக் காட்டுக்கு செல்லூர் இராஜூ (மதுரை மேற்கு): அசையும் சொத்துக் கையிருப்பு ரூ.2 லட்சத்து 45 ஆயிரத்து 650. மனைவி ஜெயந்தி கையிருப்பு ரூ.1 லட்சத்து 65 ஆயிரத்து 355. அவரிடம் 160 கிராம் தங்க நகைகள், மனைவியிடம் 400 கிராம் தங்க நகைகள், 3 கார்கள் உள்ளன. மொத்தம் சொத்து மதிப்பாக ரூ.6 கோடியே 42 லட்சத்து 73 ஆயிரத்து 355 என காண்பித்துள்ளார். கடந்த 2016 தேர்தலில் சொத்து மதிப்பு ரூ.1 கோடியே 18 லட்சத்து 89 ஆயிரத்து 415 எனவும், 2011 தேர்தலில் ரூ.51.83 லட்சம் என சொத்து மதிப்பு காண்பித்துள்ளார். கடந்த தேர்தலை விட அவரது சொத்து மதிப்பு 6 மடங்கு உயர்ந்துள்ளது. **(https://www.dinakaran.com/News_Detail.asp?Nid=663322)**

பணக்காரக் கட்சி வேட்பாளர்களில் கமலஹாசன் முதல் இடத்தில் இருக்கிறார். அவர் சொத்து மதிப்பு ரூபா 176.9 கோடி. யாகும். இதில் அசையா சொத்து ரூபா 45 கோடி, அசையும் சொத்து ரூபா 131.9 கோடி. தனக்கு மனைவி பிள்ளைகள் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். இரண்டாவது பணக்கார வேட்பாளர் அவரது கட்சியின் பொருளாளர் ஆர். மகேந்திரன். சொத்து மதிப்பு ரூபா 160 கோடி. **(https://timesofindia.indiatimes.com/city/chennai/tamil-nadu-assembly-polls-kamal-haasan-richest-candidate-so-far-mnm-vice-president-a-close-second/articleshow/81522253.cms)**

மொத்தத்தில் இம்முறை ஆளுமைபடைத்த ஜெயலலிதா இல்லாத அதிமுக அணி தேர்தலை சந்திக்கிறது. இது அந்தக் கட்சிக்குப் பெரிய பின்னடைவு.

இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஏப்ரில் 6 ஆம் திகதி தமிழகத்தில் ஆட்சி மாற்றம் சாத்தியமே!


சமூக ஒன்றுகூடல்கள்
பயங்கரமான
விளைவுகளை
ஏற்படுத்தலாம்.
COVID-19 பரவுவதைத் தடுக்க
வீட்டில் தங்கியிருங்கள்.
ontario.ca/covid-19 மூலம் மேலும்
அறியுங்கள்
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது
Ontario

Carefirst
SENIORS & COMMUNITY SERVICES ASSOCIATION

# தென்கிழக்கு மார்க்கம் பகுதிக்கு கோவிட் - 19 சம்பந்தமான அதிமுக்கியத்துவமான சமூகச் செயற்பாடுகள்

நீங்கள் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்து, உங்களுக்குச் சமூக ஆதரவு தேவைப்பட்டால் எங்களை அழையுங்கள்.

**Carefirst** இனது சமூக ஆதரவு சேவைகள் உள்வாங்கல் தொடர்பு எண்:

**416 646 5108** (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, முற்பகல் **9. 00** மணியிலிருந்து பிற்பகல் **5. 00** மணிவரை)

எமது பணியாளர்களால் கீழ்வரும் மொழிகளில் உங்களுக்கு உதவ முடியும்:
ஆங்கிலம், கன்ரனீஸ், மன்டறின், ஹிந்தி, பஞ்சாபி, தமிழ், உருது

## கிடைக்கக்கூடிய சேவைகள்:

- உணவுப் பாதுகாப்பு
- போக்குவரத்து
- மளிகைப் பொருள் கொள்வனவு
- குழந்தைப் பராமரிப்பு, தன்னார்வத் தனிமைப்படுத்தல் மையம், தங்குமிடம், வருமான உதவி ஆகியவற்றிற்கான சமூக வளங்கள்
- உளரீதியான ஆதரவு, ஆதரவுக்கான ஆலோசனை (மெய்நிகர் வழியாக)
- மருந்து / அத்தியாவசியப் பொருள் விநியோகம்
- பராமரிப்பு ஒருங்கிணைப்பு

***தகுதியானவர்களுக்கு மானியங்கள் கிடைக்கின்றன.**

## ஏனைய வளங்கள்:

**ஒன்ராரியோ தொலைபேசிச் சுகாதார சேவை உங்களுக்கு நோய்க்குரிய அறிகுறிகள்** காணப்பட்டால் அழைக்க வேண்டியது:
Tel: 1-866-797-0000

**ஒன்ராரியோ 211 / சமூகம் மற்றும் சமூக சேவைகள் உதவித் தொடர்பு:**
211ontario.ca

யோர்க் பிராந்திய கோவிட் - 19 தன்னார்வத் தனிமைப்படுத்தல் நிலையம்
**York Region COVID-19 Voluntary Isolation Centre**
1-877-464-9675
york.ca/isolationcentre

**யோர்க் பிராந்தியப் பொதுச் சுகாதாரப் பிரிவு**
1-800-361-5653

Carefirst **முதியோர், சமூக சேவை இணையம் மற்றும் கீழ்வரும் சேவைப் பங்காளர்களினால் இது எடுத்துவரப்படுகிறது**:

Carefirst Family Health Team
Centre for Immigrant and Community Services
Community & Home Assistance to Seniors (CHATS)
City of Markham
EYRND Ontario Health Team
Health Common Solutions
Health for All Family Health Team
Hong Fook Mental Health Association
Islamic Society of Markham - Jam'e Masjid Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
Markham Wesley Centre
Social Services Network
Tamil Civic Action
The Cross-cultural Community Services Association
YMCA of Greater Toronto (Markham)
York Region Community and Health Services
York Region Public Health
105 Gibson Centre
360° Kids Support Services

**Funded by: Ontario Health and Central LHIN**

Updated on February 5, 2021

# தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு மனித நேயத்துடன் உதவி வரும் கனடா மொன்றியால் (FRUITS HABY) புருட்ஸ் ஹபி நிறுவன உரிமையாளர் ஸ்ரீ அண்ணர் சண்முகலிங்கம்

## இதுவரையிலும் பல இலட்சம் ரூபாய்களை பல்வேறு உதவித் திட்டங்களுக்கு வழங்கியவர் அவரே என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் புகழாரம்









எமது தாயகத்தில் போரின் பாதிப்புக்களினாலும் மற்றும் வெள்ள அனர்த்தம், உணவுப் பஞ்சம் போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களுக்கு மனித நேயத்துடன் தனி மனிதராக உதவி வருபவர் கனடா மொன்றியால் (FRUITS HABY) புருட்ஸ் ஹபி நிறுவத்தின் உரிமையாளர் ஸ்ரீ அண்ணர் சண்முகலிங்கம்.

கடந்த பல வருடங்களாக தொடர்ச்சியாக எமது மண்ணில் பல்வேறு பகுதிகளிலும் உதவிகள் தேவைப்படுவோருக்கு இதுவரையிலும் பல இலட்சம் ரூபாய்களை பல்வேறு உதவித் திட்டங்களுக்கு வழங்கியவர் அவரே. குறிப்பாக அண்மையில் எமது தாயகத்தில் முன்னாள் போராளிகள் 12 பேருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய்கள் வீதம் 12 இலட்சம் ரூபாய்களை வழங்கி அந்தப் போராளிகளுக்கு மறுவாழ்வு அளித்தவரும் கனடா மொன்றியால் குசுருஜவுளு ர்யுடீலு புருட்ஸ் ஹபி நிறுவத்தின் உரிமையாளர் ஸ்ரீ அண்ணர் சண்முகலிங்கம் என்னும் மனித நேயக் குணாம்சம் கொண்ட வர்த்தக பெருந்தகை.

இவ்வாறு கனடா மொன்றியால் (FRUITS HABY) புருட்ஸ் ஹபி நிறுவத்தின் உரிமையாளர் ஸ்ரீ அண்ணர் சண்முகலிங்கம் அவர்களைப் பாராட்டி உரையாற்றினார் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன்.

கனடா மொன்றியால் (FRUITS HABY) புருட்ஸ் ஹபி நிறுவத்தின் உரிமையாளர் ஸ்ரீ அண்ணர் சண்முகலிங்கம் அவர்களின் நிதி உதவியில் பாதிக்கப்பட்ட இரணைதீவு மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் கையளிக்கும் வைபவத்தில் பிரதம விருந்தினர் உரையாறறிய போதே பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'மொன்றியாலின் ஸ்ரீ அண்ணர் என்று அன்பாக அழைக்கப்பெறும் சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்களின் மருமகனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியருமான ஹரி சங்கர் அவர்கள் இணைப்பாளராகப் பணியாற்றுவதன் மூலம் இந்த மனித நேயப் பணிகள் எமது தாயக மண்ணில் சரியான மக்களைச் சென்றடைகின்றன' என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் 'உலகெங்கும் வாழும் அனைத்து தமிழ் மக்களும் நன்கு அறிந்துள்ள இரணைதீவில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள், அதனால் பாதிக்கப்பட்ட அங்கு வாழும் மக்கள், அவர்களின் கடற் தொழில் பாதிக்கப்பட்ட அநியாங்கள்மற்றும் அந்த உதவிகள் அவசரமாக தேவைப்பட்ட விடயம் ஆகிவற்றை கேள்வியுற்ற ஸ்ரீ சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்கள் உடனடியாக செயலில் இறங்கி பெருந்தொகைப் பணத்தை இரணை தீவு மக்களின் துயர் துடைக்க அனுப்பி வைத்தார். இந்த மனித நேயப் பணிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட மக்களின் சார்பாக உரியவர்களோடு தொடர்பு கொண்ட இரணைதீவு பங்குத் தந்தை அவர்களும் தனது பணியை நேர்த்தியாகச் செய்துள்ளார். அவருக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கனடா மொன்றியால் நகரில் ஒரு வெற்றிகரமான வர்த்தகப் பிரமுகராகத் திகழும் சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்கள் பல வருடங்களாக இவ்வாறான மனித நேயப் பணிகளை ஆற்றிவருகின்றார். அவர் மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் இருந்தே இந்தப் நற்பணியை ஆற்றி வருகின்றார்'. இவ்வாறு புகழாரம் சூட்டினார் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் அவர்கள்.

இங்கே காணப்படும் படங்கள் இரணைதீவில் உள்ள தேவாலயத்திற்கு அருகில் எடுக்கப்பட்டவையாகும்.

- FRUITS HABY

Carefirst
SENIORS & COMMUNITY SERVICES ASSOCIATION

# கோவிட் -19
## POP-UP சோதனை

**உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.**

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் **OHIP** சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் **OHIP** அட்டை இல்லையென்றால், தயவுசெய்து **1** துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு **COVID-19** சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட **COVID-19** சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
ஒவ்வொரு வியாழக்கிழமை.
தொடக்க தேதி: ஜனவரி 14
2:00 p.m. - 6:30 p.m.

**YMCA**
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
ஒவ்வொரு புதன் & வெள்ளி.
தொடக்க தேதி: ஜனவரி 30
9:30 a.m. - 2:30 p.m.

**Markham Chinese Presbyterian Church**
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
ஒவ்வொரு செவ்வாய் & புதன்.
தொடக்க திகதி: பிப்ரவரி 2
9:30 a.m. - 2:30 p.m.

**Islamic Society of Markham (நியமனம் மூலம் மட்டுமே)**
2900 Denison Street, Markham, ON L3S 4J8 (Denison & Middlefield)
தயவுசெய்து கவனிக்கவும்: இந்த இடத்தில் சோதனை செய்வது வாகன நிறுத்துமிடத்தில் **drive-thru** நடைமுறை மூலம் இயங்கும்
ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்
(வானிலை அனுமதித்தால்)
தொடக்க தேதி: மார்ச் 12, 2021
9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
**www.carefirstontario.ca**
**Walk-In** ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் **www.carefirstontario.ca** அல்லது அழைக்கவும் **416-646-5108**

**உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association**
Carefirst Family Health Team
Health for All Family Health Team
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on January 27, 2021

SPLC

## We Are Looking for Volunteers

**Are you interested in promoting healthy active living to older adults and seniors and seeking volunteer opportunities?**

**If you are, SPLC (Senior Persons Living Connected) cordially invites you to join our Team.**

**Eligibility:**

- Good communication skills in Tamil, or English
- Youth, Older Adults, and Seniors
- Friendly, respect privacy, and confidentiality
- Available to assist and support Teleconferencing or other Virtual Programs

**Benefits of volunteering:**

- Get trained on how to effectively reach out and engage seniors
- Build confidence in facilitating fun-filled activities
- Gain meaningful work experiences and satisfaction

**For more information, For more information, please call Lydia (lydia@splc.ca, 416-490-2966) or Siva (email: sivanesan@splc.ca , Call, 416-493-3333 ext 288).**

**Senior Persons Living Connected**
**3333 Finch Avenue East Scarborough, ON, M1W 2R9**
**www.splc.ca**
**(416) 493 – 3333**


# இந்திய கடற்பரப்பில் இலங்கையை சேர்ந்த இருவர் கைது:

## படகு பறிமுதல்: உளவுத்துறை – விசாரனை



இந்திய கடற்பரப்பில் படகுடன் 2 இலங்கையர்கள் தமிழக கடலோர காவல் குழும பொலிஸாரினால் இன்று புதன் கிழமை கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் இருந்து கடத்தல் பொருட்களுடன் வந்தனரா என்பது குறித்து கைது செய்யப்பட்டவர்களிடம் பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் தீவிர விசாரனை நடத்தி வருகின்றனர்.

ராமேஸ்வரம் அடுத்து உச்சிப்புளியில் அமைந்துள்ள இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ் பருந்து விமானப்படை முகாமிற்கு சொந்தமான ரோந்து வானூர்தி இன்று புதன் கிழமை காலை இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லையில் ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்திய கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமான முறையில் இந்திய விசை படகுடன் நின்று கொண்டிருந்த இலங்கை படகை நோக்கி ஹெலிகாப்டர் தாழ்வாக சென்றதை கண்ட இந்திய படகு அங்கிருந்த தப்பி சென்றது. ஆனால் இலங்கை படகு அங்கிருந்து தப்ப முடியாமல் இந்திய கடற்படையிடம் சிக்கியது.



நடுக்கடலில் சிக்கியவர்களை இந்திய கடற்படை வீரர்கள் படகையும் அதில் இருந்த 2 பேரையும் தனுஸ்கோடி அரிச்சல் முனை கடற்கரைக்கு செல்லும் படி தெரிவித்தனர். ஆனால் படகில் இருந்தவர்கள் இலங்கை கடல் பகுதிக்குள் செல்ல முயன்ற போது இந்திய கடற்படை வீரர்கள் ஹெலிகாப்டரை தாழ்வாக செலுத்தி படகையும் அதிலிருந்த மூவரையும் அரிச்சல்முனை கடல் பகுதிக்கு கொண்டு வந்து விட்டனர்.

இதனையடுத்து அங்கு சென்ற தமிழக கடலோர காவல் குழும ஆய்வாளர் கனகராஜ் படகில் இருந்த இருவரிடம் விசாரனை நடத்தினர்.

மேலும் கைது செய்யப்பட்ட அருள் குரூஸ், ரேகன் பாய்வா ஆகிய இருவரும் இலங்கை மன்னார் பேசாலை பகுதியை சேர்ந்தர்கள்.

இவர்கள் இலங்கையில் இருந்த மீன் பிடிக்க வந்து எல்லை தெரியாமல் இந்திய எல்லைக்குள் வந்தனரா? அல்லது இலங்கையில் இருந்து தங்க கட்டிகளை கடத்தி வந்தனரா?, அல்லது நடுக்கடலில் தமிழக விசைபடகில் இருந்து சமையல் மஞ்சள் மூட்டைகளை வாங்குவதற்காக வந்த போது இந்திய கடற்படையிடம் சிக்கினரா என்ற கோணத்தில் மத்திய, மாநில உளவு துறை அதிகாரிகள் தீவிரமான விசாரனை நடத்தி வருகின்றனர்.

**- மன்னார் நிருபர்**






மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 938



## வந்தாறுமூலை மகாவிஷ்ணுகோவில்
### மட்டக்களப்பு

" அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான். "

மட்டக்களப்பிலிருந்து வடக்குத் திசையாக சுமார் பத்துமைல் தொலைவில் வந்தாறுமூலை என்னும் அழகிய கிராமம் காணப்படுகின்றது. இக்கிராமத்தின் மத்தியில் மகாவிஷ்ணு ஆலயம் அழகுற அமைந்து காணப்படுகின்றது. ஏறக்குறைய ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு, இவ்வாலயம் சிறிய ஓலைக்குடில் வடிவிலே அமைக்கப்பட்டு வழிபாடு நடைபெற்று வந்துள்ளது.

ஓலைக்குடிலாகக் காணப்பட்ட வந்தாறுமூலை மகாவிஷ்ணு கோவிலை, அவ்வூர்ப் போடிமாரே பராமரிப்பாளர்களாக இருந்து பேணிவந்துள்ளனர். ஆரம்பத்தில் இவ்வாலயத்தின் நிர்வாகம், கைலாயப் போடி என்பவரிடம் காணப்பட்டது. பின்னர் இவரிடமிருந்து தம்பிப்போடி, கைலாயப்போடி ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆயினும் இவர்கள் வயதில் முதிர்ந்தவர்களாகக் காணப்பட்டமையால், கைலாயப்போடி என்பவரே முழுப்பொறுப்பையும் ஏற்று நடத்தியுள்ளார்.

தனியொருவரின் நிர்வாகத்தை விரும்பாத ஊர்மக்கள் மாற்றத்தை வேண்டிநின்றனர். இதனால் தேசத்து வன்னிமை முன்னிலையில், குறிப்பிட்ட கைலாயப்போடியாரின் பரம்பரையினர்க்கு கோயில் உரிமை தொடர்ந்து இருக்கும் என்றும், இவர்கள் தனித்தியங்காமல் ஊரின் குடியுரிமைப்படி ஊரவர்களும் சோந்தே நிர்வாகத்தை நடத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கேற்ப மயிலிப்போடியார் என்பவரின் பராமரிப்பின்கீழ், தோம்புதோர் க. கோணேசியார் ஆகியோர் கோயில் நிர்வாகத்தை ஏற்று நடத்தி வந்தனர்.

மேற்கூறிய முடிவை ஏற்று அன்றுதொட்டு இன்றுவரை வந்தாறுமூலை கிராமத்திலுள்ள மக்கள், இவ்வாலயத்தின் திருவிழாக்களை குடிக்கணக்குப்படி சிறப்பாகச் செய்து வருகின்றனர். மட்டக்களப்பின் பராம்பரியமும், பண்பாடுகளும் ஆலயம் சார்ந்த மரபுமுறைகளும், தனித்துவம் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. வந்தாறுமூலை கிராமத்தின் குடிக்களான பரமக்குட்டிக்குடியார், காவேரிகண்டம் குடியார், புதுராரா், செட்டியாகத்தறையார், அத்தியா குடியார், கழகத்தம்பணி குடியார், மஞ்சள் பரமக் குட்டிக் குடியார், ஆகியோர் இவ்வாலயத்தின் முன்னேற்றத்திற்காகக் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளனர்.

வைகாசித்திங்களில் வரும் திருவோணநாளிலேயே மட்டக்களப்பிலுள்ள பெரும்பாலான மகாவிஷ்ணு ஆலயங்களில், திருவிழாக்கள் ஆரம்பமாவது வழக்கம். ஆனால் வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயத்தில், ஆரம்பத்தில் வருடாந்த உற்சவம் புரட்டாதி மாதத்தில் நடைபெற்றுள்ளது. பின்னர் ஏறக்குறைய இக்காலத்திலிருந்து இருபது வருடங்களுக்கு முன்னர், உற்சவம் ஆரம்பிக்கும் காலத்திலே மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி ஆனிமாதத்தில் உற்சம் நிகழ்ந்து வருகின்றது. இவ்வுற்சவம் ஆனிப்பூரணைக்கு முந்திய பத்துநாட்களும் திருவிழா நடைபெற்று, ஆனிப்பூரணையன்று தீர்த்தோற்சவத்தோடு நிறைவுபெறும்வகையில் நடத்தப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு வழக்கிலே விஷ்ணுவுக்கு நடைபெறும் உற்சவத்தை, கிருஷ்ணன்கோயிற் சடங்கு என அழைக்கும் வழக்குக் காணப்படுகின்றது. சடங்கு என்ற சொல்லிற்குத் திருமணம் என்ற பொருளுண்டு. விஷ்ணுகோயில் உற்சவத்தின் இறுதி நாளன்று, கிருஷ்ணனுக்குத் திருமணவைபவமொன்று நிகழ்வதால், இவ்வுற்சவத்தினைச் சடங்கு என்று குறிப்பிட்டிருக்கவேண்டும். விஷ்ணுகோயிலில் நிகழும் இச்சடங்கைக் கலியாணப்படிப்பு என்று கூறுவதும் உண்டு. அன்றிரவு கஞ்சன் அம்மானையிலுள்ள கிருஷ்ணனுக்குத் திருமணம் நிகழ்ந்த பகுதி படிக்கப்படுவதாலும், அன்றைய உற்சவம் சடங்கு என்ற பெயரைப் பெற்றிருக்கலாம்.

பொதுவாக மட்டக்களப்பிலுள்ள கோயில்களின் உற்சவத் தொடக்கத்தைக் கதவுதிறத்தல் என்பர். கண்ணகைஅம்மன் கோயில்கள் அண்டுமுழுவதும் பூட்டியே வைக்கப்பட்டிருக்கும். வருடத்தில் நடக்கும் ஒரேயொரு உற்சவத்துக்காகவே அங்கு வருடத்தில் முதன்முதலாகக் கதவு திறக்கப்படும். அதனாற்போலும் எல்லாக் கோயில்களின் உற்சவத்தொடக்கமும் கதவுதிறத்தல் என்ற பெயரால் வழங்கப்படுகின்றது.

மட்டக்களப்பு விஷ்ணுகோயில்களில் கதவுதிறக்கப்பட்ட நாளிலிருந்து, உற்சவ இறுதிநாளான கலியாணச்சடங்குவரை, கஞ்சன்அம்மானை ஒவ்வொருநாளும் தொடர்ந்து கிரமமாகப் படிக்கப்படும். கஞ்சன் அம்மானை ஏட்டுப்பிரதிகளையே கோயில்களில் பயன்படுத்துவார்கள். உற்சவகாலத்தில் படிக்கப்படும் பொது ஏட்டை வைப்பதற்கென ஒரு பெட்டி உண்டு. அப்பெட்டியை ஏட்டுப்பெட்டி என்று அழைப்பர். கடவுளுக்கு மடை வைப்பதுபோல, ஏட்டப்பெட்டியிலும் ஒரு மடை வைக்கப்படுவது வழக்கம்.

மட்டக்களப்பிலுள்ள விஷ்ணுகோயில்களில் ஆரம்பகாலங்களில் வெறும் சடங்குகளே நடைபெற்றுள்ளது. அப்போது திருவிழாக்கள் நடைபெறவில்லை. அவிப்பாகங்கள் படைக்கப்பட்ட பூசையொடு, நாள்தோறும் கஞ்சன் அம்மானை படிக்கப்பட்டு வந்தது. வந்தாறுமூலை கிருஷ்ணன் கோவிலில் புரட்டாதி மாதத்தில் கஞ்சன்கதை படித்தலும், மார்கழி மாதத்தில் வைகுந்த ஏகாதசியும், சிறப்பான பூசை வழிபாடுகளோடு நடைபெறும். வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயம் பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாக விளங்குகின்றது நிறைமதி நாளான பூரணை நாள், மகாவிஷ்ணுவிற்கு உகந்த நாளாகக் கருதப்படுகின்றது. இத்திருநளான்று அந்திநேரத்திலே பெண்கள் கைகளிலே பழம், வெற்றிலை பாக்கு, மலர்கள், தீபம் ஆகியவற்றை ஏந்திக்கொண்டு மகாவிஷ்ணு ஆலயத்திற்கு வரிசையாகச் செல்லும் வழக்கம் இக்கோயிலுக்குரியதாகக் காணப்படுகின்றது.

*வளரும்...*



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵖroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# WWW.THAGAVALKAL.COM

## கோவிட் தொடர்பான மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் தகவல்கள் இணையத்தளத்தில் உள்ளன

- வருமான ஆதரவு
- இளைஞர்கள், பெண்கள் மற்றும் மூத்தவர்களுக்கான சேவைகள்
- உணவு ஆதரவு
- குடிவரவு
- தங்குமிட ஆதரவு
- கல்வித்தகவல்கள்
- வேலைவாய்ப்பு சேவைகள்
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சேவைகள்

THAGAVALKAL
தகவல்கள்
**416-221-2058**



TAMIL Canadian Centre for CIVIC ACTION

Funded by the Government of Canada | Financé par le gouvernement du Canada | Canada

United Way Greater Toronto

## உங்களுக்கு கோவிட் தொற்று உள்ளதா அல்லது தற்போது தனிமைப்படுத்தலில் இருக்கின்றீர்களா?

- சிறந்த நடைமுறைகளும், உங்கள் குடும்பத்தை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பது பற்றிய கல்விமுறை வழங்கபடும்.
- உங்களை பாதுகாப்பான மற்றும் நியமிக்கப்பட்ட தனி மையத்துடன் இனணத்து விடுவோம்.
- உங்கள் வீட்டிற்கு தேவையான மளிகை பொருட்களும் சமைத்த உணவுப்பண்டமும் வழங்கப்டும்.
- நிதி உதவி.
- மருத்துவ முகமூடிகள், கை சுத்திகரிப்பான் (திரவங்கள்) வழங்கபடும்.
- மனநல ஆலோசனை சேவைகள்
- சோதனை மையங்களுக்கு போக்குவரத்து வாகன உதவி வழங்கப்படும்.

PCHS பல்வேறு மொழிமக்களுக்கு சேவை செய்ய உறுதிபூண்டுள்ளது
PCHS வழங்கும் உதவிகள் அனைத்தும் கட்டணம் இன்றி இலவசமாக வழங்கப்படும்

**எங்களை தொடர்பு கொள்ள**

தொலைபேசி எண்:
416-579-5942, 416-605-6134
மின்னஞ்சல்:
support@pchs.vom
திங்கள் முதல் வெள்ளி வரை: 9am to 6pm
சனியும் ஞாயிறும்: 10am to 6pm

pchs Serving Diverse Communities

www.pchs4u.com @PCHS @PCHS4U @PCHS4U

# மலையாள நாயகன் நீரஜ் மாதவின் அசரவைக்கும் "First Love" ஆல்பம் பாடல்





ரசிகர்கள் மனம் மயக்கும், கேட்டவுடன் துள்ளல் நடனமாடச்செய்யும் "First Love" பாடலை வெளியிட்டுள்ளார் நீரஜ் மாதவ். இயக்குநர் கௌதம் மேனனின் "ஒன்றாக" YouTube தளத்தில் நடிகர் ஆர்யாவால் இப்பாடல் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது. மலையாள திரையுலகில் பாடகர் மற்றும் நடிகராக திகழும் நீரஜ் மாதவ் தமிழில் தனது முதல் அறிமுகமாக "First Love" பாடல் வெளியாகி வரவேற்பு பெற்றிருப்பதில் பெரும் மகிழ்ச்சியில் உள்ளார். மலையாளத்தில் "மூசா ரஹ்மான்" எனும் கதாப்பாத்திரத்தில் இவர் நடித்த ஒரு வெப் சீரிஸ் மிகப்பெரும் வெற்றியை பெற்றுள்ளது. இந்த இணைய தொடரில் இவரது நடிப்பு,



பெரும் பாராட்டுக்களை குவித்தது. "Panipaali" என இவர் பாடி வெளியிட்ட மலையாள சிங்கிள் ஆல்பம் பாடல், இதுவரையிலான சாதனைகள் பலவற்றை உடைத்து அதிகம் பேரால் பார்க்கப்பட்ட பாடல் எனும் சாதனை படைத்துள்ளது. தாய்க்குடம் பிரிட்ஜ் புகழ் சித்தார்த் மேனன் நீரஜ் மாதவ்வுடன் இணைந்து இப்பாடலை உருவாக்கியுள்ளார். பிரபல ராப்பர்பாடலாசிரியர் அறிவு இப்பாடலை எழுதியுள்ளார்.

மக்கள் தொடர்பு: டி.ஒன்.

# இலங்கையில் "ஶ்ரீ விபூதி" பெற்ற எழுத்தாளர் க. கோபாலபிள்ளை



இலங்கையில், கொழும்பு தெஹிவளை பிரதேச செயலகத்தினால், ஆண்டு தோறும் கலை இலக்கியத்துறை சார்ந்தவர்களை தேர்தெடுத்து கௌரவிக்கும் தெஹிவளை "ஶ்ரீ விபூதி விருது" வழங்கும் தேர்வில், நாடறிந்த எழுத்தாளர் திரு க. கோபாலபிள்ளையினால் எழுதப்பெற்ற "அசை" என்னும சிறுகதைத் தொகுப்பு சிறந்த நூலாக தேர்ந்தெடுக்கப்பெற்று விருது வழங்கப்பெற்றது.

இலங்கையின் மேல் மாகாணத்தை முழுமையாக உள்ளடக்கிய கலை இலக்கிய படைப்பாளிகளின் ஆக்கங்கங்களைப் பரிசீலித்து அந்த தேர்வில் க. கோபாலப்பிள்ளை அவர்களின் 2வது சிறுகதைத் தொகுதியை சிறந்த இலக்கியப் படைப்பாகத் தேர்ந்தெடுத்து, 24-02-2021 அன்று கொழும்பு-7 இல் அமைந்துள்ள "நாதா அரங்கில் இந்த "ஶ்ரீ விபூதி" விருதுகள் வழங்கும் விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு அதில் எமது எழுத்தாளர் க. கோபாலப்பிள்ளை அவர்கள் கௌரவிக்கப்பெற்றார்.

யாழ்பபாணம், ஆனைக்கோட்டை, ஆறுகால் மடத்தை பூர்வீகமாகக் கொண்ட திரு கோபாலபிள்ளை, தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் - பெரியபுலம், மெதடிஸ்த பள்ளியிலும், உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், பயின்று, பின்னர் யாழ்ப்பாணம் பல் தொழில் நுட்பக் கல்லூரியிலும், பயின்று அரச பணியில் இணைந்தார்.

1973ம் ஆண்டு இலங்கைக் கடற்படையின் தலைமை அலுவலகத்தில் தட்டெழுத்தாளராகவும் பின்னர் 1974ம் ஆண்டு யாழ் மேல் நீதி மன்றத்தில் சுருக்கெழுத்தாளராகவும், தொடர்ந்து கொழும்பு மேல் நீதி மன்றம், ஊர்காவற்றுறை-சாவகச்சேரி - யாழ்ப்பாண நீதி மன்றம் ஆகியவற்றிலும் பணியாற்றிய பின்னர் 1989ம் ஆண்டு முதல் 2008 வரை இலங்கைப் பாராளுமன்றத்தில் ஹான்சாட் பிரிவிலும் இணைந்து படிப்படியாகப் பதவி உயர்வுகளைப் பெற்று, இறுதியில் ஹான்சாட் பிரிவின் பிரதிப் பதிப்பாசிரியராகப் பதவி வகித்து ஓய்வு பெற்றார். இவ்வேளையிலும், திரு கோபாலபிள்ளை, சிறந்த இலக்கியவாதி மற்றும் சிறுகதை எழுத்தாளர் என்பதை பலரும் அறிந்திருக்கவில்லை.

தொடர்ந்து இலங்கைப் பிரதமர் அலுவலகத்திலும், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திலும் இவரது சேவைக்கான நீடிப்பு வழங்கப்பெற்று அங்கு பாராட்டுப்பெறும் வகையில் பணியாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது, கொழும்பில் தனது இலக்கியப் பணியைத் தொடர்ந்து வரும் இவருக்கு உலகெங்கும் வாழும் அவரது வாசகர்கள் மற்றும் நண்பர்கள் உறவினர் ஆகியோர், தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்.

**- கனடா மொன்றியால் - வீணைமைந்தன்**






# தமிழகத்தில் ஆட்சியைப் பிடிப்பது யார்? மூன்றாவது அணி எது?

## ஏபிபி, சிவோட்டர்ஸ் நடத்திய கருத்துக்கணிப்பு முடிவு

ஏபிபி, சிவோட்டர்ஸ் நடத்திய கருத்துக்கணிப்பில் திமுக தலைமையிலான கூட்டணி பெருவாரியான இடங்களைக் கைப்பற்றும் எனத் தெரிவித்துள்ளது. அதிமுகபாஜக கூட்டணி தற்போதுள்ளதை விட மூன்றில் ஒரு பங்கு இடங்களை மட்டுமே வெல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக, அதிமுக தலைமையில் பலம் வாய்ந்த கூட்டணி எதிரெதிர் திசையில் நிற்கிறது. அதற்கு அடுத்து 3வது அணியாக கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம், டிடிவி தினகரன் தலைமையிலான அமமுக, சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சிகள் அணிவகுத்து நிற்கின்றன. சமீப நாட்களில் அமமுக, தேமுதிகவுடன் இணைந்து மூன்றாவது அணிக்கான வாய்ப்பில் முன்னிலை பெற முயல்கிறது.

தமிழகத்தில் தேர்தல் முடிவுகள் திமுக அணிக்குச் சாதகமாக இருக்கும் எனப் பலரும் கூறிவரும் நிலையில் ஏபிபிசி வோட்டர்ஸ் என்கிற தனியார் அமைப்பு தேர்தலுக்கு முன் மக்களின் மனநிலை குறித்து 5 மாநிலங்களிலும் கருத்துக்கணிப்பை நடத்தியுள்ளது. இதில் புதுவையில் என்.ஆர்.காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும் எனத்



தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் திமுக தலைமையிலான கூட்டணி ஆட்சியைப் பிடிக்கவே அதிக வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சிவோட்டர்ஸ் கருத்துக்கணிப்பில் திமுக தலைவர் ஸ்டாலின் முதல்வராவதற்கு 40% பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். முதல்வர் பழனிசாமி முதல்வராவதற்கு 29% பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். அவர்கள் சேகரித்த தகவலில் தற்போதுள்ள அதிமுக அரசு மீது 48% சதவீத மக்கள் அதிருப்தியில் இருப்பதாகவும், ஆட்சி மாற்றத்தை விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏபிபி நடத்திய கருத்துக்கணிப்பில் தற்போதுள்ள அதிமுகபாஜகபாமகதமாகா கூட்டணி மொத்தமாக 30.6% வாக்குகள் பெற வாய்ப்புள்ளது.

இதன் மூலம் 53 முதல் 61 சீட்டுகள் வரை வெல்லவே வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் திமுக தலைமையிலான கூட்டணி 43% வாக்குகளைப் பெற்று 161 முதல் 169 வரையிலான சீட்டுகளைப் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதேபோன்று திமுக, அதிமுக கூட்டணியைத் தவிர்த்து மக்கள் நீதி மய்யம் 7% வாக்குகளைப் பெறலாம். அதன் மூலம் 2 முதல் 6 சீட்டுகளை வெல்லும் எனவும், அமமுக 6.4% வாக்குகளைப் பெறலாம். அதன் மூலம் 1 முதல் 5 வரை சீட்டுகளை வெல்லும் எனவும், மற்றவர்கள் 12.3% வாக்குகளைப் பெற்று 3 முதல் 7 சீட்டுகளை வெல்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக்கணிப்பில் வாக்காளர்களில் 32.8% முக்கிய அம்சமாகச் சொல்வது வேலையின்மை. 11.6% பேர் மின்சாரம் மற்றும் தண்ணீர் பிரச்சினையையும், 10.4% பேர் சட்டம் ஒழுங்கு பிரச்சினையையும் முக்கியப் பிரச்சினையாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# சாதாரண ஏழையான எனக்கு கிடைத்த வாய்ப்பு : திருத்துறைப்பூண்டியில் போட்டியிடும் இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் மாரிமுத்து



திருவாரூர்மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அக்கட்சி சார்பில் கோட்டூர் ஒன்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் க.மாரிமுத்து வேட்பாளராக அறிவிக்கப்பட்டு போட்டியிடுகிறார். இவர் கட்சியில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வருகிறார். கடந்த 13 ஆண்டு காலமாக கோட்டூர் ஒன்றியச் செயலாளராக உள்ளார்.

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் ஒன்றியம் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. இதன் காரணமாக அப்பகுதி மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளை முன்னிறுத்தி கம்யூனிஸ்ட் இயக்கங்கள் போராடி வரும் நிலையில், அந்த போராட்டங்களை கோட்டூர் ஒன்றியச் செயலாளராக இருந்து ஒருங்கிணைத்து நடத்தி வருகின்றவர்தான் க.மாரிமுத்து (49). இவர் கோட்டூர் ஒன்றியம் காடுவாகுடி கிராமத்தை சேர்ந்த கண்ணு தங்கம்மாள் தம்பதியரின் மகனாவார்.

இவர் தாய், தந்தையர் உள்ளிட்ட குடும்பத்திலுள்ள அனைவருமே விவசாயக் கூலித் தொழிலாளர்கள்தான். இன்றளவும் இவரது மனைவி விவசாய கூலி வேலைக்கு சென்று சம்பாதித்து வருகிறார். இவர் தொடர்ச்சியாக கட்சிப் பணியாற்றினாலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அடையாளமாக சொல்லப்பட்டு வருகின்ற மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு போன்றே இவரும் யாரிடமும் அதிர்ந்து பேசாத குணமுடையவர். வயது வித்தியாசமின்றி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பணிவாக பழகுவதும், அன்பு காட்டுவதும் இவரது குணாதிசயம் என அவரை அறிந்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இவர் நேற்று (மார்ச் 17) தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அதில் தனது வங்கிக் கணக்கில் ரூ.58 ஆயிரம், மனைவியிடம் சேமிப்பு ரூ.1,000, 3 பவுன் தங்கச் சங்கிலி, 66 சென்ட் நிலம் உட்பட சுமார் ரூ.3 லட்சத்துக்கு இவரது சொத்து மதிப்பு உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இந்த வங்கி கணக்குகள் ஓரிரு ஆண்டுகளுக்குள் தொடங்கியதுதான். தற்போது புயல், தொடர் மழை போன்ற பேரிடர் ஏற்பட்டாலும் இவரது வீடு நிவாரண முகாமில்தான் தங்கும் சூழல் உள்ளது. அந்த காலகட்டத்தில்கூட தனது குடும்பத்தை பொருட்படுத்தாமல் மற்றவர்களுக்காக களத்தில் நிற்பவர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.இது குறித்து, மாரிமுத்துவிடம் கேட்டபோது, “நான் பி.காம் பட்டதாரி. நான் வசித்த தெருவில் நான் ஒருவனே படித்தவன்.

நான் பட்டப்படிப்பு படித்திருந்தாலும் கூலி வேலைக்கு சென்றால்தான் அடுத்த வேளைக்கு சாப்பாடு என்ற நிலையில், எனது குடும்பம் இருந்தது. எனது தாய், தந்தையர் சகோதரிகளோடு நாங்கள் கூலி வேலை செய்துதான் பிழைப்பு நடத்தி வந்தோம். இது ஒருபுறத்தில் இருக்க மற்றொரு புறத்தில் எங்கள் ஊர் கம்யூனிஸ்ட்டுகள் நிறைந்த பகுதி. உழைப்பாளிகளின் உரிமையை பாதுகாக்க வேண்டுமென்ற எனது அடிமனதில் இருந்த தேடல் காரணமாக நானும் பொதுவுடமை இயக்கத்தில் இணைந்து பணியாற்றினேன்.தொடர்ச்சியாக இப்பகுதி மக்களுக்கு ஆற்றிய பணிகளை அங்கீகரித்து என்னை வேட்பாளராக நிறுத்தியுள்ளனர். கட்சியை கடந்து சாதாரண ஏழை என்கின்ற அடிப்படையில் எனக்கு கிடைத்த வாய்ப்பை இப்பகுதி மக்கள் அனைவரும் வரவேற்கின்றனர். இதன்மூலம் எதிர்காலத்திலும் எனக்கு கூடுதல் பொறுப்பு இருப்பதாகவே உணர்கிறேன். மனசாட்சிக்கு, மக்கள் நலனுக்கு விரோதமாக செயல்படக்கூடாது என்பதில் எதிர்காலத்திலும் உறுதியாக இருப்பேன’’ என தெரிவித்தார்.

# சாத்தான்குளம் இரட்டைக் கொலை வழக்கை 6 மாதத்தில் விசாரித்து முடிக்க வேண்டும்: உயர் நீதிமன்றம் உத்தரவு

சாத்தான்குளம் இரட்டைக் கொலை வழக்கை 6 மாதத்தில் விசாரித்து முடிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சாத்தான்குளத்தைச் சேர்ந்த வியாபாரி ஜெயராஜ், அவர் மகன் பென்னிக்ஸ். கரோனா ஊரடங்கு காலத்தில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாக ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோரை சாத்தான்குளம் போலீஸார் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றனர். பின்னர் தந்தை, மகன் இருவரும் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

இதையடுத்து தந்தை, மகன் இருவரையும் கொலை செய்ததாக சிபிஐ போலீஸார் வழக்கு பதிவு செய்து சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள், சிறப்பு சார்பு ஆய்வாளர்கள், காவலர்கள் என 9 பேரை கைது செய்து மதுரை சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகிறது. சிபிஐ போலீஸார் ஸ்ரீதர் உட்பட 9 பேர் மீது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். கடந்த வாரம் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. இந்நிலையில் ஜெயராஜ் மனைவி செல்வராணி, உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: என் கணவர், மகன் கொலை வழக்கை முதலில் சிபிசிஐடி போலீஸார் விசாரித்தனர். பின்னர் சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் சிபிஐ மதுரை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. அதன் பிறகு வழக்கு 8க்கும் அதிகமான முறை விசாரணைக்கு வந்துள்ளது.

டிச. 10ல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், செல்போனில் யாரிடமோ பேசி ரூ. 36 லட்சம் கேட்டு மிரட்டினார். அன்று குற்றம் சாட்டப்பட்ட போலீஸார் நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களை மிரட்டினர். மோசமான வார்த்தைகளால் திட்டினர். பணபலம், ஆள்பலத்தால் சாட்சிகளை போலீஸார் கலைப்பதற்கு வாய்ப்புள்ளது. எனவே, மதுரை நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் விசாரணையை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை நீதிபதி முரளி சங்கர் விசாரித்து, மதுரை மாவட்ட நீதிம் சாத்தான்குளம் இரட்டை கொலை வழக்கு விசாரணையை 6 மாதத்தில் முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

# மாநில உரிமைகளை மத்திய அரசிடம் பறி கொடுத்துவிட்ட திராவிட கட்சிகள்: சீமான் கடும் சாடல்

மாநில தன்னாட்சி என பேசி வரும் திராவிட கட்சிகள் அனைத்து உரிமைகளையும் மத்திய அரசிடம் பறிகொடுத்து விட்டன என, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார். மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட செம்பனார்கோவில் பகுதியில் அக்கட்சியின் வேட்பாளர் காளியம்மாளை ஆதரித்து நேற்று (மார்ச் 17) மாலை சீமான் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய சீமான், “திராவிட கட்சிகள் மாநில தன்னாட்சி என பேசி வருகின்றன.

ஆனால், கல்வி இல்லை, மருத்துவம் இல்லை, எல்லா உரிமைகளையும் மத்திய அரசிடம் பறிகொடுத்துவிட்டனர். அதனால், இந்த நாடும் நாட்டு மக்களும் நன்றாக வாழ வேண்டும் என்றால், நாம் தமிழர் கட்சியை ஆதரிக்க வேண்டும்‘‘ என சீமான் பேசினார்.

சீமானின் நாம் தமிழர் கட்சி கடந்த தேர்தல்களைப் போல இந்த தேர்தலிலும் தனித்துப் போட்டியிடுகிறது. அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், திருவொற்றியூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

மாநிலம் முழுவதும் பிரச்சாரம் மேற்கொண்டு வரும் சீமான், திமுக, அதிமுக ஆகிய இரு கட்சிகளையும் கடுமையாக விமர்சித்து வருகிறார். மேலும், தங்கள் ஆட்சியில் தரமான கல்வி, தரமான மருத்துவம் ஆகியன இலவசமாக கிடைக்கும் எனவும் அவர் வாக்குறுதி அளித்துள்ளார்.


Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
1.0%
முதல்
1.5%
வரை
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்
நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் -
உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861


PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!
RE/MAX
Four Sixteen Whitby Condos
Universal City Condos 4
Old Colony Estates
U.C. Homes
Hillsborough
Andrin Homes
Cornell Rouge Homes
Forest Hill Homes Ltd.
Anchor Woods
Regal Crest Homes
On the Mark Towns
Anchor Woods By Andrin Homes
Andrin Homes
Angus Glen South Village Homes
Hometown Sharon Village
Victory Green Homes
Blue Sky
Nao Towns
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# கல்கியின் பொன்னியின் செல்வன்

**வந்தியத்தேவனின் கடம்பூர் பயணம்... அத்தியாயம் 3**


அப்பொழுது திருவிழாக் கூட்டத்தில் தன் குதிரையை விரட்டியவர்களும் அங்கே வந்தனர். இவர்களுக்குப் பாடம் கற்பிக்க நல்ல நேரம் என்று எண்ணினான். மறு யோசனையாக இளவரசர் ஆதித்தகரிகாலனின் முத்திரை மோதிரத்தைக் காட்டினால் என்னைத் தடுக்க யாராலும் முடியாது என்று சிந்தித்தான். இருந்தும் குதிரையின் அடிவயிற்றில் தன் இரு கால்களாலும் ஒரு அழுத்தம் கொடுத்தபடி, தன் உறை வாளை கையில் எடுத்து மின்னல் வேகத்தில் குதிரையுடன் முன்னோக்கிப் பாய்ந்தான்.

நிலைகுலைந்த வீரர்கள் திடீரென்று கீழே விழ, அவர்கள் வேல்களும் சட சட என்று கீழே விழுந்தன. சிலர் சிதறி ஓடினார்கள். கோட்டைக் கதவுகள் சாத்தப்பட்டன. பிடி பிடி என்ற கூக்குரல் எங்கும் எழுந்தன. அபாயம் அறிவிக்கும் முரசும் ஒலித்தது. வந்தியத்தேவனை வீரர்கள் வந்து சூழ்ந்தனர். அவ்வேளை வந்தியத்தேவன் குதிரையிலிருந்து கீழே குதித்து தன் கைகளில் வாளை ஏந்தியபடி, 'கந்தமாறா, கந்தமாறா உன் ஆட்கள் என்னைக் கொல்லுகிறார்கள்' என்று கத்தினான். கந்தமாறன் அவன் நண்பன் கடம்பூர் அரசன் சம்புவரையரின் மகன் இதைக் கேட்ட வீரர்கள் தயங்கி நின்றனர்.

மாளிகையின் மேல் மாடியில் நின்ற சம்புவரையருக்கு இந்தச் செய்தி தெரியவர, அவர் உடனே தன் மகன் கந்தமாறனை நோக்கி 'கந்தமாறா, கலவரம் என்னவென்று பார்' என்றார். உடனே கந்தமாறன் 'இங்கே என்ன ஆர்ப்பாட்டம்' என்றபடி அந்தக் கூட்டத்தில் நுழைய அங்கு நின்றவர்கள் விலகத் தன் நண்பன் வந்தியத்தேவனைக் கண்டு ஆச்சரியத்துடன், 'என் அருமை நண்பா!' என்று கட்டியணைத்து உணர்ச்சி ததும்ப நின்றான். வந்தியத்தேவனும் பாசத்துடன் அவனைத் தழுவினான். 'நீ என்னை இங்கு வருமாறு அழைத்தாய். நானும் இங்கே வந்தேன் எனக்குத் தந்த வரவேற்பு மிகச் சிறப்பு' என்றான். அதற்குக் கந்தமாறன் 'சீ முட்டாள் வீரர்களே!' என்று காவலாளிகளைக் கடிந்து கொண்டான். பின்னர் வந்தியத்தேவனின் கையைப் பிடித்தபடி குதுகலமாக அழைத்துச் சென்றான்.

அப்பொழுது 'பெண்ணையாற்றங்கரைப் பாசறையில் நாம் தங்கியிருந்த போது நீ யார் யாரை எல்லாம் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டாயோ அவர்கள் யாவரையும் பார்த்துவிடலாம் வா' என்று கூறியபடி அழைத்துச் சென்று அவர்களுக்கு அறிமுகம் செய்தான். வந்தியத்தேவன், 'இங்கு என்ன விசேடம் ஏன் இத்தனை விருந்தாளிகள்?' என்று கேட்க கந்தமாறன் 'அதைப் பின்னர் சொல்லுகிறேன்' என்றுவிட்டான். தாங்கள் இருவரும் சந்தித்த ஆனந்தத்தை பகிர்ந்து கொண்டு இன்புற்றனர். வந்தியத்தேவன் கந்தமாறனுடன் கடம்பூர் மாளிகையைச் சுற்றிப்பார்த்தான். இருவரும் அந்தப்புரத்தில் நின்றபோது கந்தமாறனின் தாய் அவனை அழைத்தாள். கந்தமாறன் உள்ளே சென்றான். அங்குள்ள பெண்களின் சிரிப்பொலி வெளியே நின்ற வந்தியத்தேவனுக்குக் கேட்டது. கந்தமாறன் மீண்டும் வெளியே வந்தபோது வந்தியத்தேவன் கந்தமாறனிடம் 'ஏன் பெண்கள் இவ்வாறு சிரிக்கிறார்கள்' என்று கேட்க கந்தமாறன் சொன்னான், '64 காயங்களைக் கொண்ட பழுவேட்டரையர் இத்தனை முதிர்ந்த வயதிலும் ஓர் அழகிய இளம் பெண்ணை மணந்துள்ளார். அவளை இன்று தன் மூடிய பல்லக்கில் இங்கு அழைத்து வந்துள்ளார். அவளை அந்தப்புரத்துக்கு அனுப்பாமல் தன்னுடனேயே வைத்திருக்கிறார். அவளைப் பற்றிய பேச்சுக்களில் எழுந்த சிரிப்பொலிதான் இது. அவளைப் பார்ப்பதற்கு எல்லோருக்கும் மிகுந்த ஆசை. ஏனென்றால் அவள் ஒரு சொப்பன சுந்தரியாம்' என்றான். அதற்கு வந்தியத்தேவன் 'நான் அவளைப் பார்த்தேன் அத்தனை அழகல்லவா நல்ல சிவப்பு நிறம்' என்றான். கந்தமாறன் ஏக்கத்துடன் 'நீ எங்கு எப்படிப் பார்த்தாய்?' என்று கேட்க, 'வரும் வழியில் மூடுபல்லக்கில்' என்று யாவற்றையும் கூறினான். பின்னர் இருவரும் குரவைக் கூத்து பார்க்கச் சென்றனர்.

வந்தியத்தேவன் குரவைக் கூத்து கண்டு மகிழ்ந்தான். பழங்காலத் தமிழ் சமுகங்களிடையே தொன்று தொட்டு வழக்கத்திலிருந்து வருவது குரவைக் கூத்து. போர் நிகழும் காலத்திலும், தீமை நிகழும் என அச்சம் கொண்டிருக்கும் காலத்திலும் இரவு நேரத்தில் களிப்புற்றிருப்பதற்கும் மக்கள் தங்கள் பொழுது போக்காக இதை ஆடினர். நடக்கவிருக்கும் விடயங்களை மறைமுகமாகத் தெரிவிப்பதாகவும் இக் கூத்து அமைந்தது. வந்தியத்தேவனும் இதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். இப்பொழுது தான் முதன்முறையாகப் பார்த்தான். கூத்து முடிந்ததும் கந்தமாறன் பெருந்தர விருந்து நடைபெற்ற இடத்திற்குச் சென்றான். வந்தியத்தேவன் அங்கு முக்கியமான சோழசாம்ராஜ்ஜிய பிரமுகர்கள் எல்லோரும் ஒன்று கூடியிருக்கக் கண்டான். அவன் களைப்புற்றிருந்ததால் கந்தமாறன் அவனிடம் ஒரு திறந்த மாளிகையைக் காட்டி 'நீ படுத்துறங்கு நான் மற்றைய விருந்தாளிகளைக் கவனித்துவிட்டு மீண்டும் உன் பக்ககம்வந்து படுத்துக் கொள்கிறேன்' என்றான். அதன் பின்னர் வந்தியத்தேவன் கண்களை மூடியபடி தூங்க முயன்றான். ஆனால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் நினைவுகளும், கனவுகளும் அவனைத் தொல்லைப்படுத்த அவன் எழுந்து கொண்டான். அக்கணம் கடம்பூர் மாளிகைச் சுற்றுமதில் மேலே ஒரு தலை தெரிந்தது அது ஆழ்வார்க்கடியான் தலைதான் ஏதோ சூழ்ச்சி செய்கிறான் என் நண்பன் மாளிகையில் இவன் சூழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பது தவறு என்று எண்ணி தன் கத்தியை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டான். ஆழ்வார்க்கடியான் தலை தெரிந்த இடம் நோக்கி நடந்தான். எங்கோ பேச்சுக் குரல் கேட்க அத்திசை நோக்கினான். பின்னர் அங்கே எட்டிப்பார்த்தான். அப்பொழுது அவன் நின்ற இடத்திற்கு கீழே ஒரு முற்றம் ஒன்றில் சுமார் பன்னிரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். அங்கு அவன் கடம்பூர் மாளிகைக்கு வரும் வழியில் பார்த்த மூடு பல்லக்கு இருந்தது. அங்கு தன் பெயர் அடிபடுவதைக் கேட்டு திகைத்தான். 'என்னைப் பற்றி என்ன கதைக்கிறார்கள் யார் இவர்கள்' என்று உற்று நோக்கினான். 'உம்முடைய குமாரனுடைய சிநேகிதன் என்று ஒரு பிள்ளை வந்திருந்தானே அவன் எங்கே படுத்திருக்கிறான் நம்முடைய பேச்சு எதுவும் அவன் காதில் விழுந்துவிடக் கூடாது. அவன் வடதிசை மாதண்ட நாயக்கரின் கீழ் பணி செய்யும் ஆள் என்பது நினைவிருக்க வேண்டும். நம்முடைய திட்டம் உறுதிப்பட்டு நிறைவேறும் காலம் வருவதற்குள் வேறு யாருக்கும் இதைப் பற்றி தெரியக் கூடாது அந்தப் பிள்ளைக்கு ஏதாவது கொஞ்சத்தகவல் தெரிந்து விட்டது என்ற சந்தேகம் மிகுந்தால் கூட அவனை இந்தக் கோட்டையில் இருந்து வெளியே அனுப்பக் கூடாது. ஓரேயடியாக அவனை மேலே தீர்த்துவிடுவது உசிதமாய் இருக்கும்' என்ற பழுவேட்டரையரின் வார்த்தைகளைக் கேட்டதும் வந்தியத்தேவனின் மனமும், தலையும் வெடித்துப்பறந்தது போல் ஒரு உணர்வு.




'வடதிசை மாதண்ட நாயக்கர் யார்? சுந்தரசோழனின் மூத்த குமாரன் அடுத்தபடி சோழ சிம்மாசனத்தில் ஏற வேண்டிய பட்டத்து இளவரசன். அவருக்குத் தெரியாத எந்த விடயத்தை இவர்கள் பேசப் போகிறார்கள். நான் எனது நண்பன் ஆதித்த கரிகாலனுக்கு வேலை செய்பவன். இங்கு நடப்பது யாவற்றைப்பற்றியும் முழவதும் அறிவது என் மாபெரும் கடன்' என்றபடி அங்கு ஒரு தூணிற்குப் பின்னால் ஒளிந்து நின்றான். அப்பொழுது தன் நண்பன் கந்தமாறன் தனக்காக பரிந்து பேசியது வந்திதத்தேவன் காதில் விழுந்தது. 'மேல் மாடத்தில் மூலை மண்டபத்தில் வந்தியத்தேவன் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருக்கிறான். இந்தக் கூட்டத்தின் பேச்சு அவன் காதில் விழப் போவதில்லை தனக்குச் சம்பந்தமில்லாத காரியத்தில் அவன் தலையிடுகிறவனுமில்லை. அப்படியே அவன் ஏதாவது தெரிந்து கொண்டாலும் அதனால் உங்கள் யோசனைக்கு பாதகம் ஒன்றும் நேராது. அதற்கு நான் பொறுப்பு' என்றான் கந்தமாறன். 'உனக்கு அவ்வளவு நம்பிக்கை இருப்பது குறித்து எனக்கும் மகிழ்ச்சி தான் ஆனால் எங்களில் யாருக்கும் அவனை முன்பின் தெரியாது. ஆகையினால் தான் எச்சரிக்கை செய்தேன். நாம் இப்பொழுது பேசப் போகிறதோ ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்தின் உரிமை பற்றிய விஷயம் அஜாக்கிரதை காரணமாக ஒரு வார்த்தை வெளியில் போனாலும் அதனால் பயங்கரமான விபரீதங்கள் ஏற்படலாம். இது உங்கள் எல்லோருக்குமே நினைவிருக்க வேண்டும்' என்றார் பழுவேட்டரையர்.

அப்பொழுது வந்தியத்தேவன், 'இது என்ன அரசுரிமை பற்றியும், ராஜ்ஜியத்தைப் பற்றியும் இவர்கள் கலந்து ஆலோசிக்கிறார்களே! அரச குடும்பத்தில் உள்ளவர்கள் எவரும் இங்கில்லை. சரி நான் நன்றாக காது கொடுத்து முழவதையும் கேட்டுக் கொள்ள வேண்டும்' என்ற ஆவேசத்துடன் மிக அவதானமாக யாவற்றையும் கேட்க ஆயத்தம் செய்தான். 'உங்களிற்கெல்லாம் மிக முக்கியமான ஒரு செய்தியை அறிவிக்கவே நான் வந்திருக்கிறேன். அதற்காகவே இந்தக் கூட்டத்தை சம்புவரையர் கூட்டியிருக்கின்றார். சுந்தர சோழ மகாராஜாவின் உடல் நிலை மிகக் கவலைக்கிடமாக இருக்கிறது. அரண்மனை வைத்திரிடம் அந்தரங்கமாக கேட்டுப் பார்த்தேன் அவர்கள் இனிமேல் நம்பிக்கைக்கு இடமில்லை, அதிக காலம் உயிரோடு இருக்க மாட்டார். என்று சொல்லி விட்டார்கள் ஆகவே இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றி நாம் இப்பொழுது யோசித்தாக வேண்டும்' என்று சொன்னார் பழுவேட்டரையர்.

தொடரும்...

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன்**

**ஜீவன் முக்தி (பகுதி )109**

# காமசூத்திரமா? பிரம சூத்திரமா? குருவே முடிவு செய்வார்



அப்பொழுதெல்லாம் ரிஷிமார்கள், குருமார்கள் மிக அழகாய், குருகுலத்திற்கு வந்திருக்கும் குழந்தைகளுடைய மனதைப் படித்துவிடுவார்கள்.

உடல்மலர்ச்சி ஆன உடனே, அந்த குழந்தை இன்னொரு ஆணையோ, பெண்ணையோ பார்க்கும் பொழுது, அந்த குழந்தையின் கண்களில் ஏற்படுகின்ற விரிவை வைத்தே, மனவோட்டத்தை வைத்தே கண்டுபிடித்துவிடுவார்கள். உடல்ரீதியான மனவோட்டம் இருந்தால் சமூகத்திற்குக் கட்டுப்பட்டு, அவர்களால் உடல்ரீதியாக நெருங்கி போகமுடியாது. ஆனால் அந்த ஏக்கம் ஒரு ஆணையோ, ஒரு பெண்ணையோ பர்க்கும்போது, கண்ணுக்குள்ளே ஏற்படும் விரிவைத் தெளிவாகக் காண்பித்து விடும். கண்ணிலே அந்த உணர்வு வெளிப்பட்டு விடும். உடலால் மறைக்க முடிவதை உணர்வால் மறைக்க முடியாது.

உடல் மலர்ச்சிக்குப் பின் உணர்வும், சக்தியும் சேர்ந்து கீழே இறங்கி வந்திருந்தால், உடனடியாக ஒரு ஆணையோ, பெண்ணையோ உடல் தேட ஆரம்பித்துவிடும். வெளியே துணையைத் தேடத் துவங்கிவிடும். உணர்வும் சக்தியும் கீழே இறங்கி வரவில்லையென்றால், இன்னொரு துணையே தேவைப்படாது. இன்னொரு துணையைத் தேட ஆரம்பித்திருக்கும் உணர்வாக இருந்தால், அந்த மாணவர்கள் இல்லற வாழ்க்கைக்குத் தேவையான காம சூத்திரம் படிக்கத் துவங்குவார்கள். உண்மையான இல்லற அறிவியலைக் கற்பார்கள். வெளியுலகிலிருந்து ஒரு துணை தேவைப்படுகின்ற உணர்வும், சக்தியும் உடையவர்களுக்கு இல்லற வாழ்க்கையே பாதையாக வகுத்துத் தரப்படுகின்றது.

'இன்னொரு துணையே தேவைப்படாத மாணவர்களாக இருந்தால் பிரமசூத்திரம் படிப்பார்கள்.'

ஞானத்திற்குள் ஆழ்ந்து போகத் தயாராவார்கள். இதிலிருந்து எப்படி சில குழந்தைகள் இன்னொரு துணையைத் தேடாத உணர்விலும், சில குழந்தைகள் இன்னொரு நபரைத் தேடுகின்ற உணர்விலும் இருக்கிறார்கள் என்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஏழிலிருந்து பதினான்கு வயது வரை காயத்ரி மந்திரத்தை ஆழ்ந்து தியானிக்கும் பொழுது, 'முதல் அனுபவம்' நடந்து விட்டால், ஆன்ம அனுபவம் நடந்துவிட்டால், அந்தக் குழந்தை உடல் மலர்ச்சி அடைந்திருந்தாலும், மனரீதியாக இன்னொரு துணையைத் தேடுவதில்லை. இயற்கையாக அவர்களுடைய உடல் வளருமே தவிர, உணர்வு வேறொரு துணையைத் தேடாது.

அவர்கள் புளியம் ஓடுபோன்று ஒன்றுக்கொன்று பாதிப்படையாத உணர்வோடு இருப்பார்கள். எப்படியும் புளியம் பழமும், ஓடும் ஒன்றோடொன்றிற்குள் இருந்தாலும், எப்படி ஒன்றுக்கொன்று தொடாமல் இருக்கின்றதோ அதுபோல், அந்த உடலும் உணர்வும் ஒன்றிற்குள்ளே ஒன்று இருந்தாலும், ஒன்றால் ஒன்று பாதிக்காதது போல, சுதந்திரமாக உயர்ந்த நிலையிலேயே இருக்கும்.

புளியம் பழமும், ஓடும்போல ஒன்றிற்கொன்று பாதிப்படையாத உணர்வோடு இருக்கும். உணர்வு உயர்ந்து சுதந்திரமாக இருக்கின்ற குழந்தைக்கு, பிற ஆணை-யோ, பெண்ணையோ பார்க்கும்பொழுது, கண்களில் எந்த மாற்றமும் இருக்காது.

மாற்றமின்றி, சலனமின்றி தெளிவாய் இருப்பார்கள்.

மாற்றமின்றி ஒரே உணர்வோடுதான் இருப்பார்கள்.

அந்த முதல் அனுபவம் நடாக்காவிட்டால், சக்தி ரீதியாக அந்த குழந்தை உடல் மலர்ச்சியின்போது, சக்தி கீழே வரும். அதோடு சேர்ந்து உணர்வும் கீழே வந்துவிடும். அதனால் தேவதைகளாக இருந்த குழந்தைகள் இப்பொழுது ஆணா-கவோ, பெண்ணாகவோ மனித உணர்விற்கு இறங்கி வந்து விடுகிறார்கள்.

அதற்குமேல், இயற்கையிலேயே, அந்த குழந்தைகளுடைய உணர்வு இன்னொரு துணையைத் தேட ஆரம்பிக்கும். இதை நாம் தடுத்தால்,

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

# BEST INDIAN ASTROLOGER & PSYCHIC

## Pandit: VEERANANDA

காசியில் இருந்து வருகை தந்துள்ளார்

31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்

உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் கூறுவார்




**MOST POWERFUL SPIRITUALIST**

Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses



- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். புகைப்படம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

**Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection**

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான்
- அதிகரிக்க – குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான
- மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்கு'டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உ'டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

எந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர்

**ஆயுர்வேத சிகிச்சை**

**Call For Appoinment: 647-858-3355**

**1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2**

**Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377


# இவ்வார ராசிபலன்

**19-03-2021 வெள்ளி தொடக்கம் 25-03-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** நண்பர்களால் பணவரவும், சொந்தங்களால் மனநிறைவும் கிடைக்கக்கூடிய வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராஜவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கக்கூடிய நன்மையான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நந்தாதேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கக் கூடிய அற்புதமான வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டமாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: புட்டுச் சொக்கநாதர், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** திட்டமிட்ட காரியத்தில் வெற்றி கிடைக்கக் கூடிய அற்புதமான் வாரம். பழைய பகைமாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமலல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** தார்மீக எண்ணங்கள் உதயமாக் கூடிய உன்னதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: உச்சிபிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** போட்டிகளால் பொறுப்பு சேரக்கூடிய பொன்னான வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிவிநாயகர், அதிர்ஷ்ட எண் 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** உங்களால் வரவும் உறவுகளால் செலவும் அதிகரிக்கக்கூடிய வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான நாள். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹரிஹராசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q





**விருச்சிகம்:** உழைப்பால் மதிப்பும் உங்களால் சிறப்பும் சேரக்கூடிய பொறுப்பான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்திபாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** பிரபல்யமான வாய்ப்பு அமையக்கூடிய அற்புதமான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்தான லட்சுமிகணபதி, அதிர்ஷ்ட எண் 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**மகரம்:** கைமேல் காசும், கௌரவ வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: மணக்குழ பகவதிஅம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** ஆதாயம் மிகுதியாகி ஆதாரம் வலுவடையக் கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தாய்முகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** அறிமுகம் இல்லாதவர் மூலமாக ஆதாயம் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K

(22ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்வுரீதியாகத்தான் தேடுவார்கள். உடல் மட்டும் தூரமாக இருக்கும். ஆனால் உணர்வுக்குள் இன்னொரு துணையைத் தேடிக் கொண்டே இருப்பார்கள்.

முதல் ஆன்மீக அனுபவம் அடையாத, சக்தி மேல் நோக்கித் திரும்பாத குழந்தைகள் காம சூத்திரம் என்ற அறிவியலை முறையாகத் தெரிந்து கொள்வார்கள். கிரகஸ்த வாழ்க்கைக்குத் தயாராவார்கள். முதல் அனுபவம் அடைந்து, சக்தி மேல் நோக்கித் திரும்பிய குழந்தைகள் எல்லாம் பிரம சூத்திரம் படித்து ஞானத்திற்குத் தயாராவர்கள். எந்த சூத்திரத்திற்குள் அவர்கள் நுளய வேண்டும் என்பது அவர்களுடைய உடல் வளர்ச்சியை வைத்தும், உணர்வை வைத்தும் எடுக்கப்படும்.

நம்முடைய முன்னோர்கள் வகுத்து வைத்த அருமையான இரண்டு வார்த்தைகள் ஊர்த்சரேஜஸ், தைத்ரியரேஜஸ். உடல் வளர்ந்திருந்தாலும், உணர்வு கீழே இறங்காத மகான்கள் சக்திரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் மேல் நோக்கியே செல்பவர்கள் ஊர்த்சரேஜஸ். உடல் வளரும்பொழுது சக்திரீதியாகவும், உணர்வுரீதியாகவும் கீழே இறங்கியவர்களை தைத்ரியரேஜஸ் என்றும் சொல்வோம்.

ஊர்த்சரேஜஸாக இருக்கின்றவர்கள், பிரம்ம சூத்திரம் படித்து பதினாறிலிருந்து இருபத்தியொரு வயதிற்குள் ஞானமடைந்து விடுவார்கள். ஞானமடைந்த பிறகு, அவர்கள் சன்யாஸ வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள். காமசூத்திரம் படித்தவர்கள், பதினான்கிலிருந்து இருபத்தியொரு வயது வரைக்கும் வாழ்க்கையை முழுமையாக வாழுவதற்கான எல்லா கலைகளையும் கற்றுக்கொண்டு, இருபத்தியொரு வயதிலேயே திருமணம் செய்து கொள்வார்கள்.

'சம்சாரியா? சன்யாசியா?' என்று எப்படி முடிவெடுப்பதே மிகப பெரும் குழப்பத்தை தீர்க்கும் தீர்வை சொல்லும். அதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தெளிந்த அறிவியல் முறைப்படி, மன உணர்வை, ஆராய்ந்து, நம்முடைய முன்னோர்கள் உருவாக்கிய அமைப்புத்தான் 'பிரமச்சரியம்' என்ற அமைப்பு. முறையாகச் சிறுவயதிலிருந்து, உணர்வை மேல் நோக்கித் திருப்பியவர்கள் திருமணம் செய்திருந்தாலும், அவர்களால் இல்லற வாழ்க்கையில் வாழ முடியாது. அதாவது யார் எந்தெந்த உணர்வுடையவர்கள், எந்தெந்த வாழ்க்கைக்கு போக வேண்டும்' என்று தெளிவாக நம் முன்னோர்கள் வகுத்து வைத்திருந்தார்கள். அந்த முறையிலேயே சென்றதினால்தான் நம்முடைய வேத பாரம்பரியத்தில், வேத கால வாழ்க்கை முறை குழப்பம் இல்லாததாக இருந்தது. முதல் ஏழு ஆண்டுகள் குருகுலத்தில் இருக்கும்பொழுது, வாழ்க்கையைப் பற்றிய முடிபுகளை பெற்றோர்கள் எடுக்கவில்லை. குருவே அந்தக் குழந்தைகளின் சூக்சும தன்மையையும், மன முதிர்ச்சியை அடிப்படையாக வைத்து வாழ்க்கைப் பற்றிய முடிபுகளை எடுக்கும் மிகப்பெரும் பொறுப்பை ஏற்றுச் செய்தார். உணர்வை கீழ்நோக்கித் திரும்பியவர்கள் சன்யாஸ வாழ்க்கையில் நுழைந்தாலும், அவர்களால் பிரமச்சரியம் வாழ்க்கையில் வாழ முடியாது. பிரமச்சரியம் அவர்களுகசு சாத்தியம் இல்லை. காலப்போக்கில் ஏதோ சில இடங்களில் அதை முறைதவறி உபயோகப்படுத்தப்பட்டது. அதற்காக அந்த அமைப்பே தவறு கிடையாது. அந்த அமைப்பிற்குப்பின் மிகப்பெரிய அறிவியல் இருந்தது. தன்னை உடலாக நினைக்கின்ற மனிதர்கள், தன்னை கீழே இறக்கும் கற்பனைகளையே உள்வாங்குகிறார்கள். எந்த நிலையில் நீங்கள் இருக்கிறீர்களோ, அது சம்பந்தான கற்பனைகளையோ அல்லது உணர்வையோ எளதாக உள்வாங்குகிறது. எற்றுக்கொள்கிறது.

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார். எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

***பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்***

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080



தற்பொழுது நடைபெறுகிறது
Since 1986
சங்கர் அன் கோ
மாபெரும் மலிவு விற்பனை!
இறக்குமதியாளர்கள், மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
அனைத்து வீட்டு உபயோகப் பொருட்களின் புதிய வரவுகள் !
இல்லத்தரசிகளின் சமையற் கலைக்கான தேர்வுகளுக்கு தன்னிகரற்ற இடம் !
SOWBAGHYA
Preethi
ULTRA
சுவாமிப் படங்கள்
உணவுப் பொருட்கள்
பசுமையான மரக்கறி
மற்றும் பழவகைகள்
பூசைப் பொருட்கள்
ஆலயத்திற்குத் தேவையான
வழிபாட்டுப் பொருட்கள்
மங்கல நிகழ்வுகளான
திருமணம், குடிமனைபுகுதல்
ஆயுர்வேத மருந்துகள்
விசேட கூந்தல் தைலங்கள்
அனைத்து மூலிகைப் பொருட்கள்....
ASIA Kitchen Machines
PREETHI Premier Mixies
ULTRA Wet Grinder
SOWBAGHYA Wet Grinder
PREMIER Wet Grinder
மண் சட்டிகள்
மட் பானைகள்
மண் அடுப்புகள்
மண் கூசாக்கள்
மின் தேங்காய் துருவி
மண்வெட்டிகள்
அப்பச்சட்டி
குளிப்பணியாரச்சட்டி
சில்வர் பானைகள்
எவர் சில்வர் பாத்திரங்கள்
எவர்சில்வர் பேணிகள்
சாப்பாட்டுத் தட்டுகள்
அலுமினி/மண் பானைகள்
அடுக்குச் சட்டிகள்
பிட்டுக் குடம், பானைகள்
தோசைக் கல்லு, உரல்
தேங்காய் துருவிகள்
கத்தி, கரண்டிகள்
இன்னும் பல!
தைப்பொங்கல் புத்தாண்டு. மற்றும் ஆலய உற்சவங்கள். புதிய இல்லங்களின் கிரகப் பிரவேச வைபவங்கள். திருமணங்கள் மற்றும் விசேட வைபவங்கள் ஆகியவற்றுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் சங்கர் அன் கோவில் தவறாமல் கிடைக்கும்.
தற்போது தமிழர் புத்தாண்டை முன்னிட்டு. இல்லங்களுக்குத் தேவையான. குறிப்பாக சமையல் அறைக்குத் தேவையான Rice Cookers. Grinding Machines, Rotty Makers and Sumeet, Preeti, Premier Chefmaster Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து விமானங்களின் மூலம் இறக்குமதி செய்யப்பெற்றுள்ளன.
இன்றே தொலைபேசியில் அழைத்து உங்கள் வருகையை உறுதி செய்த பின்னர் முகக் கவசம் அணிந்து செல்லுங்கள்...
தற்போது காலை 8.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கின்றது
அனைத்து விதமான
பசுமைமிகு பூக்கள்
மல்லிகை மொட்டு
கனகாம்பரம்
தாமரைப் பூ
சாமந்தி, அலரி
ரோஜாப்பூக்கள்
அல்லிப் பூ
கார்னேஷன் பூ
வாழை இலை
மாவிலை, அறுகு
வில்வம், துளசி, அரசிலை
பூச்சரம் எல்லா நாட்களும் கிடைக்கும்!
பிற்புறத்தில் தாராளமான வாகனத் தரிப்பிடமுண்டு
SHANKAR & Co.
2425 Eglinton Avenue East, Unit 6, Scarborough, ON M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916
(Kennedy & Eglinton)
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்! OPEN 7 Days a week

# அன்பின் தொனி - 604

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார்.**

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர், மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்துகொண்டிருக்கிறீர். ஒளியை வஸ்திரமாகத் தரித்து, வானங்களைத் திரையைப்போல் விரித்திருக்கிறீர். தமது மேல்வீடுகளைத் தண்ணீர்களால் மச்சுப்பாவி, மேகங்களைத் தமது இரதமாக்கி, காற்றினுடைய செட்டைகளின்மேல் செல்லுகிறார். தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார். பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார். அதை வஸ்திரத்தினால் மூடுவதுபோல ஆழத்தினால் மூடினீர், பர்வதங்களின்மேல் தண்ணீர்கள் நின்றது. அவைகள் உமது கண்டிதத்தால் விலகியோடி, உமது குமுறலின் சத்தத்தால் விரைந்துபோயிற்று. அவைகள் மலைகளில் ஏறி, பள்ளத்தாக்குகளில் இறங்கி, நீர் அவைகளுக்கு ஏற்படுத்தின இடத்தில் சென்றது. அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர். அவர் பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகளை வரவிடுகிறார், அவைகள் மலைகள் நடுவே ஓடுகிறது. அவைகள் வெளியின் ஜீவன்களுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கும், அங்கே காட்டுக்கழுதைகள் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும். அவைகளின் ஓரமாய் ஆகாயத்துப்பறவைகள் சஞ்சரித்து, கிளைகள்மேலிருந்து பாடும். தம்முடைய மேல்வீடுகளிலிருந்து பர்வதங்களுக்குத் தண்ணீர் இறைக்கிறார், உமது கிரியைகளின் பலனாலே பூமி திருப்தியாயிருக்கிறது. பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி, அவர் மிருகங் களுக்குப் புல்லையும், மனுஷருக்கு உபயோகமான பயிர்வகைகளையும் முளைப்பிக்கிறார். மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்சரசத்தையும், அவனுக்கு முகக்களையை உண்டுபண்ணும் எண்ணெயையும், மனுஷனுடைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையும் விளைவிக்கிறார். **- சங்கீதம் 104: 1- 15**

**கர்த்தருடைய மகிமை என்றென்றைக்கும் விளங்கும்**

கர்த்தருடைய விருட்சங்களும், அவர் நாட்டின லீபனோனின் கேதுருக்களும் சாரத்தினால் நிறைந்திருக்கும். அங்கே குருவிகள் கூடுகட்டும், தேவதாருவிருட்சங்கள் கொக்குகளின் குடியிருப்பு. உயர்ந்த பர்வதங்கள் வரையாடுகளுக்கும், கன்மலைகள் குழிமுசல்களுக்கும் அடைக்கலம். சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப் படைத்தார், சூரியன் தன் அஸ்தமனத்தை அறியும். நீர் இருளைக் கட்டளையிடுகிறீர், இராக்காலமாகும், அதிலே சகல காட்டு ஜீவன்களும் நடமாடும். பாலசிங்கங்கள் இரைக்காக கெர்ச்சித்து, தேவனால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கும்படித் தேடும். சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கி, தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும். அப்பொழுது மனுஷன் சாயங்காலமட்டும் தன் வேலைக்கும், தன் பண்ணைக்கும் புறப்படுகிறான். கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! ஆவைகளை யெல்லாம் ஞானமாய்ப் படைத்தீளூ பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது. பெரிதும் விஸ்தாரமுமான இந்தச் சமுத்திரமும் அப்படியே நிறைந்திருக்கிறது, அதிலே சஞ்சரிக்கும் சிறியவைகளும் பெரியவைகளுமான எண்ணிறந்த ஜீவன்கள் உண்டு. அதிலே கப்பல்கள் ஓடும், அதிலே விளையாடும்படி நீர் உண்டாக்கின திமிங்கிலங்களும் உண்டு. ஏற்றவேளையில் ஆகாரத்தைத் தருவீர் என்று அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும். நீர்கொடுக்க, அவைகள் வாங்கிக்கொள்ளும், நீர் உம்முடைய கையைத்திறக்க, அவைகள் நன்மையால் திருப்தியாகும். நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும், நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக் குத் திரும்பும். நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும், நீர் பூமியின் ரூபத்தையும் புதி தாக்குகிறீர். கர்த்தருடைய மகிமை என்றென்றைக்கும் விளங்கும், கர்த்தர் தம்முடைய கிரியைகளிகிழுவார். அவர் பூமியை நோக்கிப்பார்க்க, அது அதிரும், அவர் பர்வதங்களைத்தொட, அவைகள் புகையும். நான் உயிரோடிருக்குமட்டும் என் கர்த்தரைப் பாடுவேன், நான் உள்ளளவும் என் தேவனைகீர்த்தனம் பண்ணுவேன். நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும், நான் கர்த்தருக்குள் மகிழுவேன். பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாகி, துன்மார்க்கர் இனி இராமற் போவார்கள். என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அல்லேலூயா.
**- சங்கீதம் 104: 16-35**

**கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்**

கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள், அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள். அவரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள், அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப்பேசுங்கள். அவருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மைபாராட்டுங்கள், கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக. கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள், அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள். அவருடைய தாசனாகிய ஆபிரகாமின் சந்ததியே! அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய யாக்கோபின் புத்திரரே! அவர் செய்த அதிசயங்களையும், அவருடைய அற்புதங்களையும், அவர் வாக்கின் நியாயத்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள். அவரே நம்முடைய தேவனாகிய கர்த்தர், அவருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியெங்கும் விளங்கும். ஆயிரந்தலை முறைக்கென்று அவர் கட்டளையிட்ட வாக்கையும், ஆபரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கையையும், அவர் ஈசாக்குக்கு இட்ட ஆணையையும் என்றென்றைக்கும் நினைத்திருக்கிறார். அதை யாக்கோபுக்குப் பிரமாணமாகவும், இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாகவும் உறுதிப்படுத்தி: உங்கள் சுதந்தரபாகமான கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார். அக்காலத்தில் அவர்கள் கொஞ்சத் தொகைக்குட்பட்ட சொற்ப ஜனங்களும் பரதேசிகளுமாயிருந்தார்கள். அவர்கள் ஒரு ஜனத்தைவிட்டு மறு ஜனத்தண்டைக்கும், ஒரு ராஜ்யத்தைவிட்டு மறு தேசத்தாரண்டைக்கும் போனார்கள். அவர்களை ஒடுக்கும்படி ஒருவருக்கும் இடங்கொடாமல், அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக்கடிந்து கொண்டு: நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள் என்றார். அவர் தேசத்திலே பஞ்சத்தை வருவித்து, ஆகாரமென்னும் ஆதரவுகோலை முற்றிலும் முறித்தார். அவர்களுக்கு முன்னாலே ஒரு புருஷனை அனுப்பினார், யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான். அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள், அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது. கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது. ராஜா ஆள் அனுப்பி, அவனைக் கட்டவிழ்க்கச்சொன்னான், ஜனங்களின் அதிபதி அவனை விடுதலைபண்ணினான். **- சங்கீதம் 105: 1- 20**

*தொடரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS CR PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



மொன்றியல் நகரில் விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas, Broker — Sun Sanmugathas, Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வெள்ளி விழா 2021
UTHAYAN உதயன்

ADVICE FROM SOMEONE YOU CAN TRUST
Life insurance • Critical illness insurance • RESP
Kosalai Kumaraguruthasan*
647-981-1041
kosalai.kumaraguruthasan@sunlife.com
www.sunlife.ca/kosalai.kumaraguruthasan
Sun Life
Life's brighter under the sun

உதயம் 1302 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday March 19, 2021

# Rougly 200000 High School Students would be Vaccinated Soon.

**- Ontario Minister of Education**

## ஒன்றாரியோ பாடசாலைகளின் இரண்டு இலட்சம் மாணவர்கள் விரைவில் கோவிட் – 19 தடுப்பூசிகள் பெறுவார்கள் என்கிறார் மாகாண கல்வி அமைச்சர்



"ஒன்றாரியோ மாகாணத்தின் பல பாடசாலைகளில் மாணவர்கள் நேரடியாகச் சென்று கல்வி கற்று வருகின்றார்கள். அவர்களுடைய சுகாதார நலன்கள் மற்றும் பாதுகாப்பு ஆகியவை தொடர்பாக பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கூடியளவு கவனம் எடுத்து தங்கள் கடமைகளைச் செய்கின்றார்கள். அதற்கு மேலாக எமது கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் கூட அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றார்கள். இவ்வாறான நிலையில் தற்போது எமது மாகாணத்தில் பல்வேறு வயதினர்களுக்கு கோவிட்- 19 தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. இதே போன்று பாடசாலைகளில் மாணவர்களைவிட அங்கு பல சவால்களுக்கிடையில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர்களே வயதில் மூத்தவர்கள் ஆவார்கள். எனவே அவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்க எமது அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. எவ்வாறாயினும் எமது பாடசாலைகளில் மாணவர்களையும் நாம் கவனத்தில் எடுக்கின்றோம். இந்தவகையில், பாடசாலைகளில் பயிலும் இரண்டு இலட்சம் மாணவர்களுக்கு உயர் வகுப்பு மாணவர்களுக்கும் விரைவில் கோவிட்-19 தடுப்பூசி ஏற்றப்படும்"

இவ்வாறு தெரிவித்தார், ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் கௌரவ ஸ்டீபன் லெட்சே அவர்கள்.

(உள்ளே 11ம் பக்கத்தில் விபரமான செய்தி)

# The health and safety of Ontario's students is our top priority.

**- Official Opposition Leader Andrea Horwath**

## ஒன்றாரியோ மாணவர்களின் சுகவாழ்வும் பாதுகாப்புமே எமக்கு முக்கியம் என்கிறார் மாகாணத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அன்றியா ஹோவார்த்



"நாம் மாகாண பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சியாக விளங்கினாலும் இங்கு வாழும் மக்கள் அனைவரதும் சுகவாழ்வும் அவர்களத பாதுகாப்பு ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்ற ஆளும் கட்சியினரைக் கேட்டு வருகின்றோம் . அது போல, ஒன்றாரியோவில் பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று கற்கும் மாணவர்களின் உடல்நலமும் பாதுகாப்புமே எமது முக்கிய கவனமாக உள்ளது. ஆளும் கட்சியினர் சொல்வது போன்று பாடசாலைகளை மூடி வையுங்கள் என்று ஒருபோதும் வற்புறுத்தவில்லை"

இவ்வாறு கூறினார் ஒன்றாரியோ மாகாணத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவரான அன்றியா ஹோவார்த் அவர்கள்.

*(உள்ளே 5ம் பக்கத்தில் விபரமான செய்தி)*

## 80 வயதுக்கு மேற்பட்டோருக்கு கோவிட் – 19 தடுப்பூசிகளை வழங்குவதற்கு தயாராகின்றது ஒன்றாறியோ அரசு

ஒன்றாரியோ மாகாணத்திற்குள் வாழும் 80 வயதுக்கு மேற்பட்டோருக்கு கோவிட்-19 தொற்று தடுப்பு ஊசிகளை வழங்குவதற்கு ஒன்றாறியோ அரசு மாகாணம் தழுவிய முன்பதிவு மையங்களையும், இணையவழி முன்பதிவுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் மேற்படி வயதினருக்கு தடுப்பூசி வழங்கும் வண்ணம் தயாராக உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது

*(உள்ளே 11ம் பக்கத்தில் விபரமான செய்தி)*

## விடுதலைப்புலிகளின் நிதர்சனம் தொலைக்காட்சியின் ஆரம்ப கால பொறுப்பாளர் பரதன் இலண்டனில் காலமானார்



தமிழீழ விடுதலைப்புலிகள் இயகத்தின் உத்தியோகபூர்வமான தொலைக்காட்சிச் சேவையான நிதர்சனம் ஊடகத்தின் ஆரம்பகால பொறுப்பாளராக பணியாற்றி தலைவர் பிரபாகரன் அவர்களின் நன் மதிப்பைப் பெற்ற பரதன் (இராசநாயகம் பரதன் ) இலண்டன் மாநகரில் மாரடைப்பால் காலமானார் என்ற சோகமான செய்தியை எமது வாசக அன்பர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்

*(உள்ளே 8ம் பக்கத்தில் விபரமான செய்தி)*

## ஜெனீவா விடயத்தில் இலங்கைக்கு சவாலாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் செயற்படுவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றி செய்தி வெளியாகியுள்ளது

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்த வேண்டும் என்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முனைப்பு, ஜெனீவா விடயத்தில் இலங்கைக்கு பெரும் சவாலாக உள்ளதென கொழும்பைத் தளமாக கொண்டு இயங்கும் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(உள்ளே 7ம் பக்கத்தில் விபரமான செய்தி)




## தலைமன்னாரில் புகையிரத கடவையில் விபத்தின் போது பாதுகாப்பு ஊழியர் கடமையில் இருக்கவில்லை



தலைமன்னாரில் தனியார் பேரூந்து புகையிரதத்துடன் மோதி விபத்திற்குள்ளாகிய சம்பவத்தின் போது, புகையிரத கடவையில் பாதுகாப்பு ஊழியர் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை எனவும், புகையிரத கடவைக்கான தடை கூட குறித்த நேரத்தில் இடப்படவில்லை எனவும் தெரிய வந்துள்ளது. -

*(மன்னார் நிருபர்)*

*(உள்ளே 8ம் பக்கத்தில் விபரமான செய்தி)*